REGD. 4642. M

சந்தா விபரம்
—
ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு.

மலர் 8 | 14-5-50 | இதழ் 46

குட்டு வெளிப்படுகிறது!

"காந்தியார் நினைவு நிதிக்கு சேர்க்கப்பட்ட ரூபாய் 10-கோடியில் பெரும்பாகம் சில தொழில் முதலாளிகளால் கொடுக்கப்பட்டவையே. நாங்கள் இப்படிக் கொடுத்தற்கு உதார குணமோ, மகாத்மாவின் மீதுள்ள பக்தி விசுவாசமோ காரணமல்ல வருமான வரி விசாரணைக் கமிஷனிலிருந்து தப்பலாம் அல்லது சுமுகமாக பைசல் செய்துகொள்ளலாம் என்று நாங்கள் நினைத்தே, நன்கொடை தந்தோம். இந்த ஆசைக்கு இலக்கானவர்களில் நானும் ஒருவன். இதே நோக்கத்துடன்தான் நான் பல இலட்சம் ரூபாய்களை மகாத்மா ஞாபகார்த்த நிதிக்கு நன்கொடையாகத் தந்தேன்!"

—சேத்ராமகிருஷ்ண டால்மியா

உரிமை பறிபோகிறது!

வாணன்

"என்ன சாஸ்திரியாரே! மூன்றாண்டுகளுக்கு மேலாகவே உங்களைத் தலைவராக்கி வைத்திருக்கிறோம். கூட்டம் தவறாமல் உம்முடைய திறமையைப் பேசி வருகிறோம். தொழிலாளர்களைப் பார்க்கும்போதெல்லாம் உம்முடைய உருவத்தை அவர்கள் முன்னிலையில் கொண்டு வருகிறோம். உள்நாட்டில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்திற்கும் உம்முடைய ஸ்தாபனத்திற்கு மாத்திரம் அழைப்பனுப்புகிறோம். வெளிநாட்டில் நடக்கும் எந்தத்தொழில் மாநாட்டிற்கும் உம்மை மாத்திரம் அனுப்புகிறோம்! இருந்தும் அந்தச் 'சிறு பயல்களை' ஒழித்துக்கட்ட முடியவில்லை. நாளுக்கு நாள் அவர்கள் வளர்ந்த வண்ணமாகவே இருக்கின்றனரே!"

"ஐயோ, அபாண்டமான பழியை என் மீது சுமத்துகிறீர்களே! நானென்ன செய்யமுடியும்?

அவர்களெல்லாம் மாஸ்கோ கூலிகள், என்று கூறினேன். நம்பினார்கள்!

இவர்கள் உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் பதவியடையப் பார்க்கின்றனர் என்று கூறினேன்.

நம்பினார்கள்!

இவர்கள் உங்களை ஏமாற்றினால் தான் வயிறு வளர்க்கமுடியும் என்றேன்.

நம்பினார்கள்!

இன்னும் என்னென்ன விதமாக அவர்களை மட்டம் தட்ட முடியுமோ அவ்வளவும் செய்தேன்.

எல்லாவற்றிக்கும் தொழிலாளர் என்பக்கம்தான் என்கின்றனர். அதைக்கண்ட தாங்கள் கூட என் முதுகில் தட்டிக் கொடுத்தீர்கள். அகில உலகத்திலும், அரசியல் ரீதியாக, என்னைத்தான் இந்திய தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதி என்று கூறினீர்கள். ஆனால் நிலைமை அத்தோடு நின்றுவிடவில்லையே?"

"அவன்தான் மாஸ்கோ கூலி; இவன்தான் பதவி வேட்டைக்காரன்; சரி ஒத்துக் கொள்கிறோம். நீ யாரப்பா? நீ என்ன வாங்கித்தருகிறாய். அன்பு மிகுந்த வார்த்தைகளும், இனிமைதரும் சுதந்திர எண்ணமும் எங்கள் வயிற்றை நிரப்பவில்லை மகனே!" என்று தொழிலாளர் உலகம் என்னைப் பார்த்து கேட்கிறதே. அதற்கு நானென்ன பதில் கூறுவது? எத்தனைநாளைக்குப் பசப்பு வார்த்தைகள் வயிற்றை நிரப்பும்? நான் உங்களைப் பார்த்தேன். அதற்குள் நம் பக்கத்திலிருந்த பெரும்பகுதி திரும்ப வெளியே போய்விட்டது. அது மாத்திரமில்லை. நாம் பேசியதற்குப் பதிலாக இப்பொழுது எந்தத் தொழிலாளர் கூட்டத்திலும் நான்தான் தூஷிக்கப் படுகிறேன். இதுதான் பலன். முடிபு. நாடகத்தின் நடுவில், இன்பக் காட்சி நடைபெற்றது. முடிவு துன்பம் அல்லது தோல்வி!"

"தோல்வி என்று கூறாதே சாஸ்திரி. ஒரு முறை தோற்றால் இன்னொன்று இருக்கவே இருக்கிறது. இதோபார், அவர்களை ஒழித்துக் கட்டச் சட்டம். இனி இந்தப் பயல்களை நுழைய முடியாதவாறு தொழிற்சங்கங்களையே சட்டம் போட்டு மாற்றி விட்டால் என்ன செய்யமுடியும். இனிமேல் ஏதாவது தொந்தரவு கொடுத்தால் எல்லா ஆசாமிகளையும் பிடித்துக் கம்பி எண்ணவைத்து விடுகிறோம்! பிறகு நம்மை எதிர்க்க இந்திய உபகண்டத்திலேயே யாரிருக்கிறார்கள் பார்க்கலாம்!"

* * *

நேரு அரசாங்கம் மத்திய சட்டசபையில் சமீபத்தில் கொண்டு வந்திருக்கும் தொழில் உறவு மசோதாவையும், தொழிற்சங்க மசோதாவையும் படித்தவர்கள் யாவரும் டில்லி வட்டாரத்தில் மேற்கண்ட விதமான பேச்சு வார்த்தைகள் நடந்திருக்கும் என்பதைச் சுலபமாக யூகித்துக் கொள்ளலாம்.

தொழிலாளர் பிரச்னை மிகச் சிக்கலான விஷயம். அதுவும் அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டதேசத்தில் இன்னும் அதிகமானபிரச்னைகள் ஏற்படும். இந்தப் பிரச்னையைத் தீர்ப்பது அதைவிட தொந்தரவான விஷயம். இந்திய உபகண்டத்தில் திடீரென்று பதவியேற்ற நேருசர்க்காருக்கு இந்தப் பிரச்னைகளை ஆராய்ந்து நல்ல முடிவுக்கு வந்து காரிய மாற்றும் சக்தியில்லை; அல்லது அந்த அளவு மூளைவேலை செய்யவில்லை.

ஆரம்ப காலங்களிலே காங்கிரஸை விடுதலை பெறமாத்திரமே பயன்படுத்துவதாக கூறிவந்தனர் கதர்ச்சட்டைத் தலைவர்கள். தொழிலாளியின் குறைகள் யாவற்றிற்கும் பிரிட்டிஷ்காரனே குற்றவாளியாக்கப்பட்டான். சுயராஜ்யம் வந்ததும் தொழிலாளியின் வீட்டில் நெல்லும் மணியும் தாமாகவே வந்து விழும் என்று பிரச்சாரம் செய்து வந்தனர் காங்கிரஸ் தலைவர்கள். அவ்வப்போது தொழிலாளர் ஸ்தாபனங்களைத் தட்டிக் கொடுப்பதும் அவர்கள் கம்யூனிஸ்டுகளானாலும் சரி சோஷலிஸ்டுகளானாலும் சரி எல்லோரையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டும் வந்தனர். அதற்கு முக்கிய காரணம் தொழிலாளர் மேடையில் தாங்கள் ஏறமுடிகிறதே என்ற ஒன்றுதான். ஆனால் நாளடைவில் பல திடீர் மாறுதல்கள் ஏற்பட்டன.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழிருந்தபோதிலும் ஏகாதிபத்தியம் தன் நலனை உத்தேசித்தாவது இந்திய உபகண்டத்தில் பெரிய தொழிற்சாலைகளை நிறுவ ஆரம்பித்தது. தொழிற் சாலைகளை நிறுவியதின் பயனாக இந்திய உபகண்டத்திலும் முதலாளி—தொழிலாளி பிரச்னை தலையெடுக்க ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் சில நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தான் தொழிற்சங்கங்களிலிருந்தனர். ஆனால் நாட்டில் தொழில் வளம் பெருக, பெருகத் தொழிலாளர் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டே சென்றது.

1920-ல் இந்திய தொழிற்சங்கம் ஆரம்பித்த பொழுது அதிலிருந்த தொழிலாளர் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 10.000.

இன்று...பல்வேறு தொழிற்சங்கங்களையும் சேர்த்துக் கணக்குப் போட்டால் சுமார் 10-லட்சத்திற்கு மேலிருக்கும்.

சென்ற இரண்டாவது உலகயுத்தத்தின் போதுதான் தொழிலாளர் பிரச்னை காங்கிரஸ் தலைவர்களுக்குத் தலைவலி கொடுக்க ஆரம்பித்தது.

ஆகஸ்டு 1942 முதல், 45ன் மத்திய காலம் வரை காங்கிரஸ் தலைவர்கள் விடுதலை இயக்கம் காரணமாகச் சிறையில் தள்ளப்பட்டிருந்தனர். வெளியில் நாட்டில் உலாவிக்கொண்டிருந்தவர், கம்யூனிஸ்டு கட்சி, சோஷியலிஸ்டு கட்சி ஆகியவைகளிலிருந்த தொழிலாளர் தலைவர்கள் தான்! இந்த இரு கூட்டத்தவரும் காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலிருந்த நேரத்தில் தங்களுடைய இடத்தை நன்றாக, வலுவாக நிறுவிக்கொண்டனர். தொழிலாளர் ஸ்தாபனங்கள் அனைத்திற்கும் கம்யூனிஸ்டு பிடி உண்டு! பெரும்பான்மையானவை இந்திய தொழிற்சங்க காங்கிரசிடமோ அல்லது பின்னால் சோஷலிஸ்டுகளால் ஆரம்பிக்கப்பட்ட ஹிந்து மஸ்தூர் சபாவிடமோ இருந்தன.

திடீரென்று அட்லி அரசாங்கத்தால் விடுதலை செய்யப்பட்டு அதிகாரத்திலமர்த்தப்பட்ட காங்கிரஸ் தலைவர்களுக்கு கம்யூனிஸ்டையும் சோஷியலிஸ்டையும் அவர்கள் பின்னால் தொழிலாளர் ஸ்தாபனங்களையும் பார்த்தவுடன் திகிலைத்தான் கிளப்பிவிட்டிருக்கும்.

பாமரமக்கள் செல்வாக்கு வாய்ந்த தலைவர்கள் கூறுவதைக் கேட்டுக் கொள்வார்கள். அவர்களை ஏமாற்றுவது சுலபம். அதுவும் இந்தியா போன்ற கல்விவாசனையற்ற நாட்டில் சர்வசாதாரணமாகச்செய்யலாம். சுயராஜ்யம் வாங்கிக்கொடுத்தது நான் தான் என்ற ஒரு வார்த்தையைக் கூறியே பாமரமக்களில் பெரும் பகுதியைத் தங்கள் கையில் போட்டுக் கொண்டனர் காங்கிரஸ் தலைவர்கள். ஆனால் தொழிலாளர் விஷயம் வேறு பல பிரச்னைகளைக் கொண்டது.

தொழிலாளிக்கு, அவன் வசதி பெருக வேலை செய்தால்தான் மற்றவன் தலைமையை அங்கீகரிப்பான். 'சும்மா' தினம் இருக்கிற பத்திரிகைகளிலெல்லாம் அவன் தலைவரின் புகைப்படம் வருகிறதே என்பதற்காக ஒரு தலைமையைச் சகித்துக்கொள்ளமாட்டான். அதோடு காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் சில பிற்போக்குத் தலைவர்கள் நீங்கலாக முற்போக்குக் கட்சிகளைச் சார்ந்த அத்தனை தலைவர்களும் 'தொழிலாளர் குடியரசை' அவனுக்கு இன்பபுரியாகக் காட்டிவந்திருக்கின்றனர்.

இந்த நிலையில் காங்கிரஸ் தலைவர்கள் கொஞ்சம் புத்திசாலித்தனமாக இருந்திருந்தால், காலத்திற்கேற்றவாறு தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொண்டு தொழிலரசை நிறுவ அஸ்திவாரக்கல்லாவது போட்டிருக்கலாம். ஆனால் அந்த அளவு இருக்கின்ற நிலைமையையும், வருங்காலத்தை ஊடுருவி நோக்கும் தன்மையும் காங்கிரஸ் தலைமைப்பீடத்திற்கு இல்லை.

ஒரு 'நடுபாதை' கூட கண்டுபிடிக்கவில்லை.

நேராக முதலாளித்துவத்திற்கு சரணாகதி அடைந்துவிட்டது!

போரில் ஒரு கட்சியைச் சரியென்று ஒத்துக்கொண்டால், பிறகு மாற்றான் நமக்கும் எதிரிதானே?

அறிந்தோ, அறியாமலோ முழுத் தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட காங்கிரஸ் இனிமேல் தொழிலாளி ஸ்தாபனங்களையும், கட்சிகளையும், முற்போக்குக் கட்சிகள் அனைத்தையுமே எதிர்த்தாகவேண்டிய சூழ்நிலைக்கு கொண்டு வந்துவிடப்பட்டது.

அதன் பலதான் இந்திய தேசிய தொழிற்சங்கம். முடியுமானால் இந்திய தொழிற்சங்கத்தையும் இந்து மஸ்தூர் சபாவையும் ஒழித்துக்கட்டச்செய்யப்பட்ட முயற்சி இது.

தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ் நாட்டிலே மற்ற முற்போக்குச் சங்கங்களைத் திட்டுவதையே தன் முதல்வேலையாக வைத்துக்கொண்டது. காங்கிரஸ் தலைவர்கள் அத்தனை பேரும் கூடி, இந்த ஸ்தாபனத்தைப் பலப்படுத்தப்பார்த்தனர்.

எவ்வளவு நாளைக்குத்தான் தொழிலாளியை ஏமாற்றமுடியும்? அவன் தலைவர்கள் வார்த்தையிலே எவ்வளவு நாளைக்கு மயங்கியிருப்பான்?

"கூலி உயர்வு?" என்று அவன் கேட்டால் தேசியத் தொழிற் சங்கத் தலைவர்களின்பாடு ஆபத்தாகிவிடுகிறது.

தேசியத் தொழிற்சங்கத் தலைவர் ஹரீந்திரநாத் சாஸ்திரி பட்டேலைப் பார்க்கிறார்.

பட்டேல் முதலாளியைப் பார்க்கிறார்.

முதலாளி 'கூலி உயர்வு' கேட்டால் 'நான் மில்லையே மூடிவிடுவேன். நீ உன் இஷ்டப்படி நடத்து' என்று சொல்லாமல மில்லை மூடிவிடுகிறான்.

பிறகு பட்டேல் மில்லை நடத்தும்படி முதலாளியைக்கேட்டுக் கொள்வதைத்தவிர, மில்லைத்தேசியமயமாக்கத் துணியமாட்டார். ஆகவே தேசிய தொழிற்சங்கம் வெகுசிக்கிரத்தில், காங்கிரஸ் தலைவர்கள் எதிர்பார்த்த பலனைத்தரவில்லை அதனால் நாட்டில் வளர்ந்து வரும் முன்னேற்றச் சக்திகளைத் தடைசெய்ய முடியவில்லை. பிறகு வேறென்ன வழி?

டில்லியில் கூடியிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் அரசாங்கத்தை ஆளும் உரிமை தங்களுக்குமட்டும் தான் உண்டு. தங்களால்தான் முடியும் என்ற மமதையிலிருப்பவர்கள்.

ஆகவே, அவர்கள் தங்கள் கட்சிக் காரியங்களை, தங்கள் கட்சி வளருவதற்கேற்ற சட்டதிட்டங்களை அரசாங்கரீதியாகச்செய்வதற்குத்தயங்குவதேயில்லை.

அந்தப் பழக்கத்தில்தான் இந்த "தொழில் உறவு மசோதாவும்' "தொழில் சங்க மசோதாவும்" மத்திய சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதைத்தவிர வேறெந்தக்காரணமும் இருக்கநியாயமில்லை.

இந்தச் சட்டங்களின்படி நாட்டில் உள்ள தொழிற் சங்கங்களின் உரிமைகள் பல பறிக்கப்படுகின்றன. ஆதிக்க எண்ணங்கொண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கொடுத்து வந்த உரிமைகளைக்கூட சுயராஜ்ய அரசாங்கம் பறித்துக்கொள்கிறது.

இந்த மசோதாக்களின் முக்கிய நிபந்தனைகள் சில ஹிட்லரைக்கூட ஞாபகப்படுத்தும்,

"தொழிலாளி தன் உரிமைகளை அடைய வேலை நிறுத்தம் செய்யமுடியாது. அப்படிச் செய்யவேண்டுமானால் அதற்கு முன்னால் வேலைக்கு வைத்திருப்பவன், அரசாங்கம் எல்லாரிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டுதான் வேலை நிறுத்தம் செய்யவேண்டும்! அது மாத்திரமில்லை. சில தொழில்களைத் தேசநலன்களுக்கு அத்யாவசியமானது என்று சர்க்கார் குறிப்பிடுமாம். அவைகளில் வேலை செய்பவர்கள் வேலை நிறுத்தம் என்பதை நினைத்தாலே குற்றம்! சட்டவிரோதம்!!

தொழிற் சங்கங்களில், வெளியார்கள், அதாவது, அந்தந்தத் தொழிலில் வேலை செய்து சம்பளம் வாங்காமல் தொழிலாளர் துணைவன் என்ற முறையில் தொழிற் சங்கங்களில் பங்கெடுத்துக்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது!

குமாஸ்தாக்களின் (மத்தியதர வகுப்பு) சங்கத்திற்கு வெளியார்கள் தலைவர்களாகவோ, மற்றக் கமிட்டி அங்கத்தினர்களாகவோ இருக்கக் கூடாது.

இப்படியாக ஒவ்வொரு சட்டமும் தொழிலாளர் உரிமைகளைப் பறித்துக்கொள்கிறது.

இதைத்தான் அரசாங்கம் தொழில் உறவு மசோதா, தொழிற் சங்க மசோதா என்று அசெம்பிளி முன் கொண்டுவந்திருக்கிறது மசோதாவின் ஷரத்துக்களைப் பார்த்தால், முன்னால் விளக்கியமாதிரி முற்போக்குச் சக்திகளை அழிக்கச் செய்யும் முயற்சிகளில் இதுவுமொன்று என்பது நன்றாக விளங்கும்.

இந்திய சட்டசபையில் இந்த மசோதாவை எதிர்த்துப் பேசியது, தாஸ் என்ற ஒரே சோஷியலிஸ்ட் மெம்பர்தான். ஹரீந்திரநாத் சாஸ்திரி தன் கடமையை நன்றாக நிறைவேற்றிவிட்டார்.

முன்னொருநாள் நீக்ரோக்கள் விடுதலை மசோதாவை, ஒரு சில விலைக்கு வாங்கப்பட்ட நீக்ரோக்கள் எதிர்த்தனர், அமெரிக்காவில்!

அதுபோலத் தொழிலாளர் உரிமையைப் பறிக்கும் மசோதாவை ஹரீந்திரநாத் சாஸ்திரி தேசிய தொழிற் சங்கத்தின் சார்பாக ஆதரித்துவிட்டார்!

தொழிலாளரின் அடிப்படை உரிமையைப்பறிக்கும் இந்த மசோதாவைப்போல வேறெந்த நாட்டிலும் இல்லையே, நீங்கள் மாத்திரம் ஏனய்யா இதைக்கொண்டு வருகிறீர்கள் என்று கேட்காதீர்கள்.

"இந்தமாதிரி மசோதா மற்றநாடுகளில் இல்லையே என்று கேட்காதீர்கள். மற்ற நாடுகளில் இல்லாவிட்டாலும், நமக்கு இதுதேவை என்றுதான் நாங்கள் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம்" என்று ஜகஜீவன்ராம் இந்த மசோதாவை அசெம்பிளியில் கொண்டு வரும்போது பேசியிருக்கிறார். வேடிக்கையாகத்தானிருக்கிறது. மேல் நாடுகளிலுள்ள முற்போக்குச் சட்டங்களை இங்கும் செய்யச்சொன்னால், நமது தேசத்திற்கு அது தேவையில்லை என்றுகூறும் நேரு சர்க்கார், அதுவாகச் செய்யும் பிற்போக்கு மசோதாக்களை, மேலை நாடுகளில் இல்லாத இந்தச்சட்டம் நமக்கு ஏனப்பா என்றால், நமது தேசத்திற்கு இதுதான் தேவையென்று கூறும். எதேச்சாதிகாரம், நாஜீசம், பாசிசம், ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் என்ற பல பெயர்களில் இந்தப்போக்கைக்குறிப்பிடலாம்.

வருங்காலத்தில்தொழிலரசு நிறுவுவதற்கு இந்தச் சட்டம் மகத்தான தடைக்கல். இந்தச்சட்டம் நிறைவேறியபிறகு தொழிற் சங்கம் சாதாரண பஜனை மடமாகத்தான் வாழ வேண்டும். இல்லாவிட்டால் அரசாங்க விருந்தினராகத் தொழிலாளிகள் மாறநேரிடும்.

கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு மற்றும் எல்லா முற்போக்குக் கட்சிகளையும் தொழிற் சங்கங்களிலிருந்து, வெளியேற்றுவதற்கு காங்கிரஸ் அரசாங்கம் இந்தமசோதாவைக்கொண்டு வருகிறது. அதோடு தொழிலாளியின் அடிப்படை உரிமையாகிய "வேலை நிறுத்தம்" பறிக்கப்படுகிறது.

தொழிலாளிகள் எல்லோரும் ஒருமித்த குரலில் இந்த மசோதாவை வாபஸ் வாங்குமாறு அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டும். மேதினத்தில் இந்த வேலை செய்யப்பட்டது. அதுமாத்திரம் போதாது. இந்த மசோதா செலக்ட் கமிட்டியிடமிருந்து திரும்பி அசெம்பிளி வருவதற்குள் மக்களின் எதிர்ப்பைக் கண்டு நேரு சர்க்கார் பயப்படும்படியான அளவுக்கு இன்னும் அதிகமான எதிர்ப்புக் கோஷம் கிளப்ப வேண்டும். எல்லாவற்றையும் மீறி, நேரு சர்க்கார் இந்த மசோதாவைச் சட்டமாக்கினால், பிறகு முடிவைக் காலம் நிர்ணயிக்கும். எரிமலைக்கு மூடியிட்டுத் தீக்குழம்பை அடக்கியவர்கள் இன்னும் ஏற்படவில்லை. சரித்திரம் தன்வழக்கமான வழியைப் பின்பற்றும். தொழிலாளி உணர்ச்சி கொண்டு ஆதிக்கக்காரர்களைத் தகர்த்தெறியும்போது அதன் துளிகளில் தொழிற்சங்கமசோதாவும், தொழில் உறவு மசோதாவும் கிடக்கும்!

புத்தர் போதனை ஓர் போர்முரசு

13-ம் பக்கத் தொடர்ச்சி

அறியாத ஆண்டவனைப் பற்றிய கவலை தேவையில்லை. அறிவை நம்பு; அதன் வழி நட" என்றான் அவன். அவன் பெயர் புத்தன்.

X X X

கி. மு. ஆறாம் நூற்றாண்டு. இமயமலைச்சாரலிலே கபிலவாஸ்து என்றோர் நகரம். அதைச் சுற்றி ஒரு நாடு. நாட்டின் மன்னன் சுத்தோதனன். அவன் மைந்தன் சித்தார்த்தன். பத்தொன்பது வயது நிரம்பிய வசீகர வாலிபன். நாட்டின் இளவரசன். அவனுக்கு யசோதரை என்ற அன்பு மனைவி. அழகுக் குவியல்; அலங்காரமான அரண்மனை வாழ்வு. ஆனந்தத்தின் உறைவிடமாய் இலங்கியது, அவனது மாளிகை. மலர் குலுங்கும் பூந்தோட்டம். அதன் நடுவே தாமரைத் தடாகம். ஆடம்பரம்; ஐஸ்வரியம்; அந்தஸ்து அவ்வளவும் அவனுக்கு இருந்தது. துன்பம், துக்கம், துயரம், அல்லல் இவை போன்ற சொற்கள் அவன் அறியாத வார்த்தைகள். சொர்ணமயமான மாளிகை தெரியும், அவன் ஆசைக் காதலியின் சுந்தரவதனம் தெரியும். அவ்வளவு சொகுசான வாழ்வு இன்பப் பொய்கையிலே மூழ்கி மூழ்கித் திளைத்தான். அம்சதூளிகா மஞ்சத்திலே யசோதரையின் அரவணைப்பிலே சொக்கிக் கிடந்தான், பலநாட்கள். அவளது புன்னகை அவனுக்குப் போதை தரும். அவளது அகன்ற விழிகளிலே வழிந்த கனிவு, அவள் மொழிகளிலே இருந்த குழைவு, உல

கின் ஒப்பற்ற இன்பக் களஞ்சியம் இங்கே குவிந்து கிடக்கிறது என்று அவனது உள்ளத்திற்குச்சொல்லும். அவனது அன்பு வாழ்விற்கு அடையாளச் சீட்டுபோல் யசோதரைக்கு ஓர் ஆண் குழவியும் பிறந்தது.. தங்கக்கட்டிபோன்ற அந்தப் பிள்ளை அமுதிற்கு ராகுலன் என்று பெயர் சூட்டினர். அரண்மனையைச் சுற்றி உயரமான மதிற்சுவர்கள் — இளவரசன் கண்ணிலே வெளியுலக வேதனை வாழ்வு தெரியக்கூடாது என்பதற்காகக் கடுமையானக் கட்டுக்காவல்; அவ்வளவும் அரசன் ஏற்பாடு. சித்தார்த்தனும், உலகமுழுதும் சிங்கார வாழ்வு நடத்தும் என்றுதான் நினைத்தான், வெளியுலகம் தெரியாத காரணத்தால். அதற்காகவே "சிங்காரச் சிறை"யிலே அவன் வீட்டில் இருந்தது. ஆனால் அவனது சிந்தனையை எப்படிச்சிறையிடுவது? மாளிகை மண்டபங்களைத் தாண்டி, மதிற் சுவர்களைத்தாண்டி, அகழிகளைத்தாண்டி, கோட்டை, கொத்தளங்களைத் தாண்டி "தீனி" தேட ஆரம்பித்தது. அவனது எண்ணத்திலே முதலிலே சிறு சிறு சிந்தனைப்பொறிகள். இதுதான் இன்ப வாழ்வா? எல்லோரும் பெற்று மகிழ்கிறார்களா? வாழ்க்கை என்பது என்ன? ஆரம்பம் — முடிவுபற்றிய வரலாறு என்ன? வாழ்வின் இலட்சியம் எப்படிப்பட்டது? மக்கள் வாழ்க்கைமுறை எப்படி அமைந்துள்ளது என்றெல்லாம் எண்ண ஆரம்பித்தான். சிறு பொறியாக இருந்தது, பெருந்தீயாக மாற ஆரம்பித்தது. அவன் மனதிலேபெரியபுயல், போராட்டம், கொந்தளிப்பு. மக்களின் பிரச்னைகளைப்பற்றி ஆராய ஆரம்பித்த அவனுக்கு, நாட்டின் நிலைமைபற்றிப் படப்பிடிப்பு நன்றாகக் கிடைத்தது.

கங்கைச் சமவெளி—பிராமணீயம் பெருமையுடன் கொலுவீற்றிருந்தது. நாட்டிலே நால்வருணம், அதிலே மேல்வருணம் பிராமணர்கள். அவர்கள்தான் பூதேவர்கள்; பூசுரர்கள் ஆண்டவனின் பிரதிநிதிகள், அருளைப் பெற்றுத்தர இருப்பவர்கள்; நாடாண்ட வேந்தனும் அவர்கள் சுட்டுவிரல் ஆடினால் ஆடியாகவேண்டும். அரண்மனையிலே அவர்களுக்கு அமோக செல்வாக்கு. மன்னாதி மன்னனாயிருப்பான்; போரிலே புயலெனக்கிளம்பி, புலியெனப் பாய்ந்து, எதிரியை மண்டியிடச் செய்திருப்பான், நாட்டை தனது வீர ஆற்றலால காத்திருப்பான்; வனமிருகங்களைக் கொன்றிருப்பான்; தோள் வலிமையைத் தரணிக்கு அறிவித்திருப்பான். ஆனாலும் பூனைபோல் பணிய வேண்டியதுதான் பூசுரர் முன்பு. ஏனென்றால், அவன் "ராஜகுரு" வேதத்தின் காவலாளர்கள்; மேல் ஜாதி; மன்னனோ கீழ்ஜாதி; அவர்கள் உபதேசப்படி நடக்கக் கடமைப்பட்டவன். காஷாயம் தரித்தோர், கமண்டலம் ஏந்திகள், ஜெபமாலை உருட்டியோர் எங்கும் தென்பட்டனர். ஆரண்யங்களிலே பர்ணசாலைகள். அங்கே வேதத்தின் ஒலி கிளம்பிக்கொண்டிருந்தது. ரிஷிகள், ஞானிகள், தபோவனர்கள் என்று தங்களைத் தம்பட்டம் அடித்துக் கொண்டோர். யாக யோகங்களிலே ஈடுபட்டிருந்தனர். ஓமப்புகை வளர்ந்தது. யாககுண்டங்களிலே ஆடு, மாடு, குதிரை பொசுக்கப்பட்டன, ஆண்டவனுக்கு அவிர்பாகம் என்ற பேரால். சோமரசமும் சுராபானமும் அருந்தினர்; ஆண்டவனுக்குப் படைப்பதாகக் கூறினர். இடியை, மின்னலை, இந்திரனை, சந்திரனை, வாயுவை, வருணனை, கதிரவனை, கங்கையை, அக்கினியை பஜித்தனர். அபிஷேக ஆராதனைகள் நடத்தினர். பாராயணப் பாடல்கள் பஜித்தனர். மந்திர உச்சாடனங்கள் ஜபித்தனர். ஆலயங்களை எழுப்பினர்; அவைகளிலே ஆரணங்குகளாகிய நடன சுந்தரிகள் நாட்டியமாடினர். விபசாரத்தின் மூலம் வந்த பணத்தை கோவிலுக்குக் காணிக்கை தந்தனர். வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள், உபநிஷத்கள் பெருகின. வேத விளக்கமும், ஆகம அருமையும், சாஸ்திர சம்மதமும் உபநிஷத்தின் உட்பொருளும் பேசப்பட்டன. பொய்யும் புனைசுருட்டும் நிறைந்த புராணக்கதைகள், அவதாரங்களின் ஆபாசத் திருவிளையாடல்களைப்பற்றிக்கூறியது. மோட்சம் நரகம் என்ற லோகங்கள் சிருஷ்டிக்கப்பட்டன. மோட்சம், இன்பபுரி, நரகம் துன்பக்குழி, என்று சொல்லப்பட்டது. மோட்ச லோகத்தின் வழிகாட்டி என்ற பெயரை வைத்துக்கொண்டு குருமார்களாக, அர்ச்சகர்களாக உலவினர். பிராமணியம் போதனை செய்தது, இவ்வுலக வாழ்வே பாவம் நிறைந்தது; பிறவா வரம் பெறவேண்டியதே வாழ்வின் இலட்சியம், அதற்குப் பாசத்தை பற்றை அறுத்து, ஆசைகளைக் கருக்கி ஐம்புலன்களை அடக்கி, காவியை மாட்டி, காதலை ஓட்டி, கந்தமூலம் அருந்தி கடுந்தவம் செய்ய வேண்டுமென்று பிராமணியத்தின் முக்கிய கோட்பாடு, மறுபிறப்பு உண்டென்பது. மறுபிறப்பு என்றால், சொர்க்கத்திலே பிறப்பதாக சொல்லவில்லை. இவ்வுலகிலேயே அவரவர் செயலுக்குத் தகுந்தமாதிரி, மாடாகவோ, பன்றியாகவோ, மனிதனாகவோ, மற்றதாகவோ, பிறப்பதாகக் கூறியது. இந்த நிலை, அவரவர் செயலுக்கு, வினைக்குத் தகுந்தவாறு அமையும் என்றது. இது விதியல்ல. இந்த வினையை கர்மம் என்றழைத்தனர். இப்படிக் கர்மத்தைக் காட்டி, மக்களின் வாழ்விலே உள்ள துயரத்தைக் களையாமல், திருப்திப்படும் மனோபாவத்தை வளர்த்தனர். மக்களும் ஆட்டுமந்தைகள்தானே' குழந்தைப் பருவத்திலேயிருந்த மனித சமுதாயம், குள்ளநரிக்கூட்டத்தின் நயவஞ்சகத்தை நம்பியது. நால்வகை ஜாதி, நாதன் கட்டளை என்றனர், நம்பினர். நாலாம் சாதிக்கு, நாமகள் அருள் கிடையாது. அவர்கள் கல்வி கற்கக் கூடாது. வேதமோதினால், நாக்கை அறுக்கவேண்டும் என்றனர், அதையும் நம்பினர். நாட்டுமக்களின் வாழ்விலே, நஞ்சைக்கலக்கிய அதேநேரத்திலே, நாடாள்வோரின் அரண்மனைகளிலேயும் பிராமணியம் தனது பிடியைப்பலப்படுத்திக்கொண்டிருந்தது.

சாம்ராஜ்யங்களுக்கிடையேசண்டைமூட்டுதல், அரண்மனைக்குள்ளே அமளியைக்கிளப்புவது, கோட்டைக்குள்ளேயே குத்து வெட்டை உண்டாக்குவது, ஒரு மன்னனின் மகுடத்தை மாற்றானுக்குப் பறித்துத் தர சதி செய்வது, ஆகிய "சத்காரியங்களிலே" ஈடுபட்டிருந்தனர், அந்த சூதுமதியினர். அரண்மனைகளிலேயும், அந்த அளவிற்கு அவர்கள் ஆதிக்கம் புகுந்திருந்தது.

சித்தார்த்தனின் சிந்தனை ஓயவில்லை. அவனது உள்ளம் உலைக்கூடமாகிவிட்டது. "நாம் மட்டும் கோலமாளிகையிலே கொஞ்சிக் குலாவி வாழுவதா? கொடுமைக்காளான மக்கள் குவலயத்திலே

கோவெனக் கதறிக்கிடக்கின்றனரே, குதூகலமே அவர்களுக்குக் கிடையாதா? ஏன் இந்த நிலை? இதை மாற்றக்கூடாதா? முடியாதா? எனக்குத் தான் எத்தனை நாள் கிடைக்கும், இந்தஇன்பநிழல்" இப்படியெல்லாம் அவனது இதயத்திரையிலே எண்ணங்கள், வர்ணந்தீட்டின. "கொடுமைக்களையப்படவேண்டும்,குவலயத்திற்கு கொள்கையைக் கொடுக்க வேண்டும்" என்ற குன்றாத உறுதி அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

பூசுரகுலத்தைச் சேர்ந்த ஓர் வேதவிற்பனர் அகப்பட்டார். அவரிடமும் இந்த வினாவையே கேட்டான். அவர் வேறு விடை என்ன சொல்வார். மனைவிமக்களை நீத்திருந்து, விரதம்பூண்டு, பட்டினியிருந்து, ஆரண்யத்திலே அலைந்து, ஆத்மசுத்தி செய்து, ஆண்டவனின் அருளைப்பெற முயல்வதுதான் வழி. இது சாஸ்திரத்தின் சாரம் என்றார். அவனுக்கு முழுத்திருப்தி ஏற்படவில்லை. ஆனாலும் உண்மைவழிகாண வேண்டுமென்ற துடிப்பு மட்டும் கொஞ்சமும் ஓயவில்லை.

* * *

காசிநகரிலே உள்ள மான்தோட்டம் என்ற மலர்ப்பூங்காவிலே, குடிலமைத்து, தனது கொள்கையை விளக்கினார். பிரிந்த ஆணவர்கள் அவருடன் கூடினர். அவரின் கோட்பாடு, மக்களைக் கவர ஆரம்பித்தது. பலர் புத்தரைப் பின்பற்றுபவர்களாயினர். அவர்களைக் கூட்டி, சங்கம் அமைத்து, கொள்கையைப் பரவச் செய்தார்.

புத்தரின் அன்பு மார்க்கம்—அறநெறிக்கு செல்வாக்குப் பெருகியது. மக்கள் மன்றத்திலேமட்டுமல்ல, மன்னர்கள் அவையிலேயும், மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. அசோகன், கனிஷ்கன், ஹர்ஷர் போன்ற பேரரசர்களையெல்லாம், புத்தரின் கொள்கைவழி, நடக்க வைத்தது. அசோகனாலே, கனிஷ்கனாலே, ஹர்ஷனாலே படையெடுப்பால் நுழைய முடியாத தென்னாட்டில், புத்தரின் அறிவியக்கம் ஆமோதிப்பைப் பெற்றது.

சீனாவிலே, சையாமிலே, பர்மாவிலே, இலங்கையிலே, ஜப்பானிலே, திபேத்திலே, புத்தரின் கொள்கைகள், பவனிவர ஆரம்பித்தன.

பகுத்தறிவின் அடிப்படைமீது கட்டப்பட்ட புத்தரின் இயக்கம், பார்ப்பனியத்திற்கு வெடிகுண்டு. தரைமட்டமாக்க வந்த புயல். தாழ்த்தப்பட்டவரும், தர்பாரூராரும் ஒன்றுதான் என்ற கொள்கையைப் பார்ப்பனியம் எப்படிச் சகிக்கும்? பகுத்தறிவின்படி நட, மோட்ச நரகத்தைப்பற்றிய கவலை வேண்டாம். உண்மை தேவை, கபடவேஷம் உதவாது. ஒழுக்கம் உயரவேண்டும், என்ற இந்த கருத்துக்கள் பரவினால் பிராமணியம் பிணமாகுமே! என்ற கிலியைத் தந்தது.

உண்மையிலேயே புத்தரின் போதனை, ஓர் போர்முரசம், பிராமணியக்கொடுமைக்கு, எதிராக! சனாதனத்துக்குவிடுத்த சவால்—அறைகூவல்! நமது நாட்களிலேயே—அறிவும், விஞ்ஞானமும் வளர்ந்த ஜனநாயக நாட்களிலேயே முரடானது என்று கருதப்படுகிற கருத்துக்களை, 2400 ஆண்டுகளுக்கு முன்பு, தன்னந்தனியாக, அதுவும் மக்கள் மடமையும், பக்தியும் பூண்டிருந்த நாட்களில், சொல்லுகிற தைரியம், ஒருவருக்கு இருந்தது என்றால், அது பாராட்டப்படவேண்டியதும், பெருமைப்படவேண்டியதும் கூட அல்ல, ஆச்சரியப்படக்கூடியது. அத்தகையச் செயலைச் செய்தவர் புத்தர். புத்தருக்கு முன், ஆசியாவிலேயே, அப்படிப்பட்ட ஓர் மாவீரரை, சரித்திரத்திலே காணோம். தென்கிழக்குஆசிய நாடுகளின் முதல் சரித்திர புருஷர், அவர்தான். அதிலே சந்தேகமில்லை. அவரது புகழுக்கும், சிறப்புக்கும் சாட்சியாய், பலகோடிபௌத்தர்கள், திபெத், சைனா, ஜப்பான், சையாம், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலே காணப்படுகிறார்கள்.

ஆனால், அவர் பிறந்த தாயகத்திலே, எந்தக்கொள்கைக்காக, எந்த இலட்சியம் நிறைவேற, புத்தரின் தியாகவாழ்வு மேற்கொள்ளப்பட்டதோ, அது நிறைவேறவில்லை, என்றுதான் கூறவேண்டும். பிராமணியம், புத்தரை மதத்தலைவராக்கி, அவதாரத்திலே சேர்த்துவிட்டது. அவரைச்சுற்றியும், புண்ணியக்கதைகளைப்பெருக்கிவிட்டது. புத்தர் வழி காட்டி என்ற "ஹீனயானம்"போய், புத்தரே கடவுள் என்ற "மஹாயானம்" தந்திரக்காரர்களால் புகுத்தப்பட்டது. எதற்காக புத்தரின் போதனை பிறந்ததோ, அதன் உயிரைப் பறித்துவிட்டு, உடலை மட்டும் வைத்துக்கொண்டனர். வெறும் உருவத்தில், மயங்கினரே தவிர, அதன் உண்மை மறைக்கப்பட்டுவிட்டது. எனவேதான், நாட்டிலே 2400 ஆண்டுகளுக்கு முன்பிருந்த கேடுகள், இன்றும் இருக்கக் காண்கின்றோம்.

கேடுகளை ஒழிக்கும் முயற்சியும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு தான் வருகிறது. ஆனால் பௌத்த மதம் என்ற பெயரிலே சொல்ல முடியாது. காரணம் மெல்ல மெல்ல புத்தரின் கொள்கைகளை மதமாக்கி பிராமணியத்திற்கும் பௌத்தத்திற்கும் வேறுபாடின்றி, தங்கள் நிலைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். எனவேதான், அறிவின்தூதர்கள் அணிவகுப்பிலே தலைமை வகிக்கவேண்டிய புத்தரை, அவதாரங்களின் பட்டியலிலே சேர்த்து விட்டார்கள். இந்த அவமானத்தை மாநிலத்திலே எந்த நாட்டிலும் காணமுடியாது, இந்த விசித்தி பூமியைத்தவிர! புத்தர் விழாவிற்கெல்லாம் வாழ்த்துச் செய்திகள் அனுப்பும் பெருந்தலைவர் அம்பேத்கார் பௌத்தமதத்தில் சேர் தேன் என்று சொல்ல ஆரம்பி தால், திடுக்கிடுகிறார்கள்—திகைக் றார்கள்! காரணம பார்ப்பனீய திலே அவர்களுக்குள்ள பற்றும் பாசமும்தான். அண்மையி நடந்த புத்தர் விழாவிலே பேசுகி நேரத்தில், அறிஞர் அம்பேத்கா பிராமணியத்திற்கும் பௌத்தத் திற்கும் உள்ள வேற்றுமைகளை ஆராய்ந்து சீர்தூக்கிப் பாக்கவேண் டும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆராய்ந்து பார்க்காமலேயே அ பட்டமாகத் தெரிகிற ஒன்றிற் அவ்வளவு திரையிட்டிருக்கிறார்கள். பார்ப்பனீயத்தின் பாதுகாவலர்கள் பார்ப்பனியம் புத்தரின் கோ பாடுகளை அழித்து விட்டது என் நாம் கூறுகிற நேரத்தில், நம்மை வகுப்பு வாதிகள், பிராமணீய வை கள் என்றெல்லாம் குற்றஞ்சாட் கிறார்கள். அவர்களாலேயே ஒ பற்ற சரித்திரப் பேராசிரியர் என் ஒப்புக்கொள்ளப்பட்டவரும், பேர ஞருமான காலஞ்சென்ற எச். ஜி வெல்ஸ் அவர்கள் "உலகத்தி சுருங்கிய வரலாறு Short Histor of the world என்பதில் குறிப்

(8-ம் பக்கம் பார்க்க)

இந்தியும் 'தமிழ் மகனும்'

—பரதன்—

[1]

"தமிழ் மகனே! தமிழ் மகனே!" என்று அழைத்தபடி, காரியாலயத் தாழ்வாரத்தில் சென்றுகொண்டிருந்தேன்; எதிரே காணப்பட்ட அறையை நோக்கி. என் குரலிலே தோய்ந்திருந்த அன்பும் ஆர்வமும் கண்டுதானோ என்னவோ, காவலாளி, முகமலர்ச்சியுடன், "உள்ளே போய் உட்காரும் ஐயா! யாரைப் பார்க்க வந்தீர்? எதற்காக? உமது பெயர் என்ன? எல்லா விவரமும் குறித்துக் கொடுங்கள்" என்று கேட்டான். 'தமிழ் மகனை'க் காண வந்திருக்கிறேன் — தமிழர் நிலை குறித்துத் தெரிந்துகொள்ள—பரதன் – என்று எழுதிக் கொடுத்தனுப்பி விட்டு அறையிலே இருந்த நாற்காலியில் அமர்ந்தேன். காற்றிலே மிதந்து வரும் கீதம் கேட்டது. என் எதிரே இருந்த மேஜைமீது, ஏடுகள், தாள்கள் பல இருந்தன. சுவரிலே, காந்தியார், ஜவஹர், ஆச்சாரியார் ஆகியோரின் படங்கள் இருந்தன. தமிழ் மகனின்' வருகைக்காக, ஆவலோடு காத்துக்கொண்டிருந்தேன். இரண்டோர் விநாடிகளாயின! கதவு திறக்கப்பட்டது. ஆவல் மிகுதியால், "தமிழ் மகனே!" என்று கூறிக் கொண்டே திரும்பிப் பார்த்தேன். என் நண்பன், குமரப்பன் "நீங்களா?—" என்றுகேட்டுக்கொண்டே என் எதிரே நின்றான். "அடடே! குமரப்பா! நீ, இங்கு......" என்று நான் கேட்கலானேன்—"கம்பாசிடராக இருக்கிறேன் —தெரியாதா உங்களுக்கு" என்றான் குமரப்பன். "தெரியாது குமரப்பா!" என்றேன். "இங்கே என்ன வேலையாக......" என்று அவன் கேட்கலானான். ஆர்வத்துடன் "தமிழ் மகனைக் காண வந்திருக்கிறேன்" என்றேன். பிறகு சில நிமிஷங்கள், குடும்ப விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தோம். "வேலை மிகுதி —நேரம் இல்லை பேச" —என்று கூறிவிட்டு, குமரப்பன் சென்றுவிட்டான் — செல்லு முன், ஒரு காகிதச் சுருளை மேஜைமீது வைத்துவிட்டு, அதன்மீது கண்ணாடியால் செய்யப்பட்ட அழகான அசோக சக்கரத்தை எடுத்து வைத்துவிட்டுச் சென்றான். அந்த அசோகச் சக்கரம் அழகாக இருந்தது—கையில் எடுத்துப் பார்த்தேன்—காற்று அடித்தது காகிதம் கீழே விழுந்தது — எடுத்தேன், பழயபடி வைக்க — குமரப்பனின் கரத்திலே! இருந்த 'மை' அதிலே ஒட்டிக்கொண்டிருந்தது. என்ன செய்கிறோம் என்ற நினைப்பின்றி காகிதத்தைப் படிக்கஆரம்பித்தேன்,

"எனவே ஹிந்தி பாஷையின் ஏகாதிபத்யத்தை ஸ்தாபிக்கும் முயற்சி வெறும் பூச்சாண்டி அல்ல; நமக்கு ஏற்பட்டுள்ள உண்மையான அபாயம் என்றே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

ஹிந்தி ஏகாதிபத்தியத்திற்காக திட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் கண்டறிவதற்கு முன்பே, கண்டறிந்து, கண்டித்தனர் திராவிட இயக்கத்தார். இந்தி ஆபத்து வருகிறது—தாய்மொழிக்கு, தமிழ் மொழிக்கு ஆபத்து வருகிறது —என்று எச்சரிக்கை செய்தனர்—தமிழ்நாடெங்கும் கிளர்ச்சி செய்தனர். மூலை முடுக்குகளிலெல்லாம் இந்தி ஒழிக—இந்தி ஒழிக—என்ற முழக்கம் கேட்டது. ஹிந்தி எதிர்ப்பு நடைபெற்றது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கிளம்பினர் — மறியல் நடைபெற்றது. அந்தோ! அனியாயம்! இரு இளைஞர்கள் சிறையிலே மாண்டும் போயினர். ஆண்களும் பெண்களும் சிறை புகுந்தனர்—ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறை சென்றனர்.

ஹிந்தி ஏகாதிபத்தியம் ஏற்பட இருக்கிறது என்பதை உணர்ந்து அவர்கள், தாய்மொழியை, தமிழகத்தைக் காக்கப் போரிட்டனர், அந்தச் சமயத்திலே.........ஐயகோ! இப்போது எண்ணிக்கொண்டால், துக்கம் நெஞ்சைத் துளைக்கிறது—வெட்கம் தலையைச் சாய்க்கிறது—அந்தச் சமயத்திலே, நாம், அவர்களை, குறுகிய மனப்பான்மையினர்—குதர்க்கவாதிகள்—கோமாளிப் போக்கினர் —என்றெல்லாம் ஏசினோம், எதிர்த்தோம் — ஏளனம் செய்தோம்—அடக்கு முறையால் அழித்தோம். தமிழுக்கு ஆபத்து இல்லை, என்று பேசினோம். ஹிந்தி தமிழை அழிக்காது என்று உறுதி கூறினோம். ஹிந்தி,என்பது சூழ்ச்சித்திட்டமல்ல, வடநாட்டுஆதிக்கத்துக்காகப் புகுத்தப்படும் திட்டமல்ல, என்று விளக்கங்கள் கூறினோம். கேலிச் சித்திரங்கள் தீட்டினோம். அந்தக் கிளர்ச்சியைக் கேவலப் படுத்தினோம்.

ஆபத்து வருகிறது என்று கூறினர் —அவர்களை அட்சியம் செய்தோம்.

அருமைத் தமிழ்மொழி அழிகிறது என்று கூறினர்—ஆணவமாகப் பேசி அவர்தம் வாயை அடக்கினோம்.

தமிழ் காக்கக் கிளம்பினர்—தடி கொண்டு தாக்கினோம்.

"இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள் எல்லோரும் வாருங்கள் தோழர்களே!"—என்று பாடினர்—நாம் அவர்களைச் சாடினோம்.

"எப்பக்கம் வந்து புகுந்து விடும் இந்தி, எத்தனை பட்டாளம் கூட்டிவரும்" என்று பாடிக் கேட்டனர்—நாம், போலீஸ் படையை ஏவினோம்

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 14—5—50 [காஞ்சி

கவலை தீர!

✲

போர்! போர்!!—என்ற கர்ஜனைகள் கிளம்பின இரு திசைகளிலிருந்தும். கலங்கினர் மக்கள்—கலக்கம் இருநாடுகளிலும் எதிரொலிக்க ஆரம்பித்தது.

போர்ப் புயல்! — வெகு மோசமானதாச்சே, விளைவு விபரீதமாகிவிடுமே, நாட்டைக் காடாக்கிவிடுமே, மலர்த் தோட்டத்தை மண்மேடாக்கிவிடுமே, என் செய்வது இப்போது! என்று பொங்கி எழுந்தது, வருத்தமும் சபலமும் நாட்டில் பலரிடையில்.

எல்லோரும் ஏமாந்தனர்!

புயல், தென்றலாக மாறிற்று! போர் முழக்கம், புன்சிரிப்பாயிற்று!

X X X

புதுநிலை, போர்ப் புயலால் நாடு கெடுமே என்று நடுங்கிக் கிடந்தோரிடை மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் உண்டுபண்ணியிருக்கிறது. எலியும் பூனையும், நாயும் நரியும், புலியும் பசுவும் — என்று கூறப்பட்ட உவமைகள், பத்திரிகைகளிலிருந்து மறைந்துவிட்டன! விரோதம் என்ற வீண் அம்பு—இப்போது வீசப்படவில்லை. சமரச நினைப்பும், சகோதர மனோபாவமும் இரு நாட்டினரிடையிலும் அரும்பி, விரிந்துகொண்டிருக்கின்றன.

இந்தப் புது நிலை, இந்திய பாகிஸ்தான் நாடுகளின் எதிர்காலத்தைச் சிக்கலில்லாத பாதையில் கொண்டு செல்லவேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் எழும்பவே செய்யும்.

இந்த ஆசை, கருகிய மொட்டாகிவிடாது, என்பதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

வியாபாரப் போக்குவரத்தில் ஏற்பட்ட சிக்கல், சிறிது தளர்ந்திருக்கிறது. பாகிஸ்தான் பிரதமர், இந்தியாவின் உன்னத நிலை குறித்துப் புகழ்ந்து பேசுகிறார். சிற்சில பத்திரிகைகள்மீது இரு நாடுகளும் விதித்திருந்த தடையுத்திரவுகள் நீக்கப்பட்டிருக்கின்றன, முறையே இரு அரசாங்கங்களாலும்!

மகிழ்ச்சி தரும் நிலை இது. ஆனால் இரு நாடுகளின் எண்ணத்தைக் கவர்ந்ததும், பல தகராறுகளுக்கு மூல காரணமானதுமானது காஷ்மீரப் பிரச்னை. கவலைதரும் அளவிலேயே இன்றும் இருக்கிறது.

காஷ்மீரத் தகராறு-பல பிரச்னைகளுக்கு மூல காரணமென்பதுமட்டுமல்ல, அரும்பியிருக்கும் புது நிலையைக்கூட கருகிவிடுமாறு செய்யக் கூடும்!

மன மாச்சரியம், பலப் பரீட்சை, பண விரயம் எல்லாம் காஷ்மீரத் தகராறு, இரு நாட்டுக்கும் வழங்கும் தொல்லைகள்! பாகிஸ்தான்—இந்தியா நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட தகராறுகளின் அடிப்பீடம்கூட "காஷ்மீரம்"தான்.

ஐக்கிய நாடுகள் சபையில் வாக்குவாதங்களும், அதன் பலனாக வாக்கெடுப்பு யோசனைகளும், சமரசத் தூதர்கள் பயணமும், இதற்காக ஏராளமான பண விரயமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருந்தும் இப் பிரச்னை இன்னும் முடியவில்லை.

கடைசியாக, கடுமையாகிக்கொண்டிருந்த காஷ்மீரப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க ஐ.நா. சபை அனுப்பிவைத்திருக்கிறது, ஓவன் டிக்ஸன் என்ற ஆஸ்திரேலிய அறிஞரை—நடுவணாராக, நல்ல தீர்ப்பு வழங்கும் நாயகராக!

அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலீ—காஷ்மீர மத்தியஸ்தர் ஓவன் டிக்ஸனைச் சந்தித்திருக்கிறார், நியுயார்க் நகரில்! காஷ்மீரப் பிரச்னை குறித்து இருவரும் நெடுநேரம் விவாதித்துக்கொண்டிருந்தனராம்.

இந்தியா பாகிஸ்தான் இரு நாடுகளிடையே பிளவு ஏற்பட்டால், பேதம் உண்டானால் அகில உலக வல்லரசுகள் தங்களின் ஆதிக்க வேட்டைக்குப் பயன்படுத்திக்கொள்ளத் துடிக்கின்றன-தவியாய்த் தவிக்கின்றன,

இருசர்க்கார்களின் கூட்டு முயற்சியால் நம்பிக்கை பிறந்துவிட்டது—புது நிலையும் உதயமாகியிருக்கிறது' வீண் வம்பை மனதில் வைத்து, இரு நாடுகளிலும் புயல் வீசச் செய்யும் ஒரு பிரச்னையை வளர்த்துக் கொண்டே போவது நல்லதல்ல—காஷ்மீரத், தகராறு தீர்க்கப்படாவிடில் அரும்பியிருக்கும் புது நிலை அவிந்துபோகவும் நேரலாம்—புதுத் தகராறுகள் கிளம்பவும் ஏற்படலாம்!

இதனால் கவலை அதிகரிக்குமேயொழிய, தீராது. எனவே, நன்மை பயக்கக்கூடிய இப்பிரச்னையை இரு நாட்டுத் தலைவர்களும், மேற்கத்திய வல்லரசுகளின் வல்லூறு ஆட்டத்திற்கு இரையாகாமல், நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்வதே நல்லது. நலம் தரும் செயல் இதுதான்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

டுள்ள,பொன் கருத்துக்களைப்பாருங்கள், பிறகு தீர்ப்பு கூறுங்கள்.

புத்தரின் வெளிப்படையான, தெளிவான போதனைகளுக்கு எப்பொழுதுமே இந்திய சமூக வாழ்விலே தலைமையாகவும், உரிமைகள் அனைத்தையும் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்ட குருமார் சாதியான பிராமணர்கள் எதிர்த்தே வந்தனர். புத்தரின் செல்வாக்கைக் கொஞ்சம்கொஞ்சமாக இந்த பூமியிலிருந்து ஒழித்து விட்டனர். இந்து மதத்தின் பழைய கொடூரக் கடவுளர்கள், எண்ணிறந்த தத்துவங்கள், கோட்பாடுகள், மீண்டும் பீடமேறிக்கொண்டன. சாதி முறை சிக்கலானதாகவும், கொடுமையானதாகவும் மாறிக் கொண்டது. பல நீண்ட நூற்றாண்டுகள் புத்தமும், இந்து மதமும் ஒருங்கு செழித்து வளர்ந்தன. பிறகு சிறிது சிறிதாக புத்தமதம் அழிந்து விட்டது. பார்ப்பனீயம் பல்வேறு வடிவங்களிலே அதன் இடத்தைக் கைப்பற்றிவிட்டது.

வெல்ஸ் சொல்கிறார்: வீணரின் கூடாரமாம் பிராமணியம், வித்தகரின் பாசறையான புத்த மதத்தை விழுங்கிவிட்டது; வேண்டுமென்றே, திட்டமிட்டு, சதி செய்தது என்று! நாமும் அதையேதான்சொன்னோம்—சொல்கிறோம். எனினும் பார்ப்பனீயம் திமிரோடு நம்மைப் பார்க்கிறது, சிரிக்கிறது கேலியோடு! இதை அனுமதிக்கலாமா? ✲

இந்தியும் 'தமிழ் மகனும்'

7-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்களைத் தாக்க! இன்று உணருகிறோம், நமது தவறை! இன்று உணருகிறோம் உண்மையை! இன்று உணருகிறோம், ஹிந்தி ஏகாதிபத்தியம் தலை தூக்குவதை!

அன்று கொண்டிருந்த ஆணவம், நமது அறியாமையின் விளைவு.

சேற்றினைப் பூசிக்கொண்டோம் சந்தனம் என்று எண்ணி—நாற்றம் அடிக்கிறது இன்று, நமக்கு. அன்றே, இது சந்தனமல்ல, சேறு என்று கூறியவர்களின் நினைப்பு வருகிறது.

ஆழமான படுகுழி, அருகே போகாதீர் என்று எச்சரித்தனர் — ஆணவநடை நடந்து சென்று வீழ்ந்து விட்டோம் படுகுழியில். — வீழ்ந்தபிறகு தான், முன்கூட்டியே எச்சரித்தவர்களின் நினைவு வருகிறது.

வெட்கப்படுகிறோம் — துக்கப்படுகிறோம் — மன்னிக்கக் கோருகிறோம்.

கடந்துபோனதை மறந்துவிடும் கண்ணியர்கள் அவர்கள் —தமிழ் காக்கும் கடமைக்காக, நமது முன்னாள் மடைமைச் செயல்களை மறந்துவிடும் இயல்பினர், அவர்கள்.

அவர்களுக்குத்தான் இன்று 'மனு'ச் செய்து கொள்கிறோம், நீங்கள் முன்பு கூறியது போலவே, ஹிந்தி ஏகாதிபத்யம் மிரட்டுகிறது —உணருகிறோம் — இனி இதனை ஒழிக்கும் முயற்சியைத் துவக்குங்கள்—ஒத்துழைக்கிறோம் — என்று கூறுகிறோம்.

மொழிப் போர்—மொழிப் போர்!—இனி—இன்று!! ஆங்கில ஏகாதிபத்யத்தை ஒழித்தாகிவிட்டது!

ஹிந்தி ஏகாதிபத்யத்தை ஒழித்தாக வேண்டும்!

அதற்கான, அணிவகுப்பைத் தயாராக வைத்துள்ள, அன்பர்களே! புறப்படுங்கள்! முரசு கொட்ட வருகிறோம்! களத்திலே கூடுவோம் நண்பர்களாக! கணமும் இனித்தாமதியோம்!

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிமையானது எங்கும் காணோம்—என்ற பாரதி வாக்கை மறவோம் —ஹிந்தி ஏகாதிபத்யத்தை ஏற்கோம்! ஹிந்தி ஒழிக!

தமிழ் வாழ்க!

தமிழ் வாழ, ஹிந்தி ஒழிக!"

* * *

நான், பூரிப்பால் தாக்கப்பட்டுப் போனேன்—இதனைப் படித்து முடித்ததும், இஃதன்றோ வீரம்! இதன்றோ நேர்மை!! பண்புடையோர் கொள்ள வேண்டிய போக்கன்றோ இது! குற்றம் உணர்ந்து உருகுகிறார்! கொட்டுவேன் முரசு என உறுதி தருகிறார்! தொடுப்போம் மொழிப்போர் என்று பாணி பாடுகிறார்! எவ்வளவு வீரம்—நேர்மை!! இனித் தமிழகத்துக்கு என்ன குறை! இனி வெற்றிக்கு என்ன தடை! வீழ்ந்தேபோவர் இந்தி வெறியர்கள்! ஒழிந்தேபோகும் இந்தி ஏகாதிபத்யம்!— என்று எண்ணினேன்—மெல்லிய குரலிலே, எனக்குநானே கூறியும்கொண்டேன்; நேர்மையும் வீரமும் ததும்பும் அச்சொல்லோவியம் தீட்டப்பட்டதாளைக் கண்களிலே ஒத்திக்கொண்டேன்—குமரப்பன் கரத்தால் ஏற்பட்ட மையும் என் கண்ணீரும் கலந்தது.

X X X

உட்புறக்கதவு திறந்தது — அதிசயம், ஆனால் உண்மை—பாதிமுகத்தைத்துணியால் மறைத்துக்கொண்டிருந்த ஒருவர் வந்தார்—வணக்கம் கூறிக்கொண்டே, கடிதத்தை, என் 'ஜேபியில்' வைத்துக்கொண்டேன்.

"பாதன்........"

"நான்தான்! தாங்களா, தமிழ் மகன்?"

"ஆமாம்........"

"பாதிமுகம்...........?"

"ஏன் மறைக்கப்பட்டிருக்கிறது என்கிறீரா? காரணம் இருக்கிறது! இன்னும்கொஞ்சநாட்களுக்குத்தமிழ் மகன்—என்பது யார் என்று தெரியாமலிருப்பது நல்லது. அதற்காகத் தான், இந்த முகமூடி......"

"எனக்குப்பிடிக்கவில்லை....தமிழ் மகன் யார் என்று அறிய ஆவலோடு வந்திருக்கிறேன்"

"ஆவல் இருக்கும்........சகஜந்தானே...ஹிந்தி சம்பந்தமாகநான் எழுதிய கட்டுரையைப்பார்த்தபிறகு ஆவலாகத்தான் இருக்கும்......"

"கட்டுரை என்று சர்வசாதாரணமாகக்கூறுகிறீரே! தமிழ்மகனே! கட்டுரை அல்ல அது — உள்ளத்தின் படப்பிடிப்பு—உணர்ச்சிச் சித்திரம் —தமிழரின் எதிர் கால வாழ்வுக்கு அடிப்படை........"

"ரொம்பப் புகழ்கிறீரே!"

"ஏன், கூடாது, தமிழ்மகனே! வீரமும் விவேகமும் நிரம்பியமடல் விடுத்திருக்கிறீர் — சோர்ந்து கிடக்கும் தமிழகத்தைத்தட்டி எழுப்ப.."

"ஒரு வகையில் உண்மைதான்"

"தமிழ்மகனே! இந்தி ஏகாதிபத்யம் ஏற்படுத்த உண்மையாகவே முயற்சி நடைபெறுகிறதா?......?"

"சந்தேகமா அதற்கு? வடநாட்டுத்தலைவர்கள், இந்தி ஏகாதிபத்யத்தை உருவாக்கிக்கொண்டுதான் வருகிறார்கள். என் கட்டுரையிலே, நான் தெளிவாக அதைக்குறிப்பிட்டிருக்கிறேனே."

"தமிழ்மகனே! 'கல்கி' ஆசிரியர், எப்படி இதனை வெளியிடச் சம்மதித்தார்"

[முக்கியமான விஷயத்தைக் கூறுதிருந்தேன்—பொறுத்திடுக— நான் தமிழ்மகனைக் காண் பதற்காகச் சென்ற இடம், 'கல்கி' காரியாலயம்]

"சூட்சமம் இருக்கிறது அதிலே"

"அவருடைய கருத்தும் அதுதானே"

"இருக்கலாம்—வேறாகவும் இருக்கக்கூடும்—"

"உண்மைத் தமிழ்மகன் வேறு கருத்துக்கொள்ள முடியாது"

"ஆமாம்......நான் அதையும்என் கட்டுரையில் குறித்திருக்கிறேனே"

"தமிழ்மகனே! இந்தி ஆதிக்கம் என்று தீட்டாமல், இந்தி ஏகாதிபத்யம் என்று, கட்டுரைகுத் தலைப்புக் கொடுத்திருக்கிறீரே,காரணத்தோடு தானே?"

"காரணமற்றுத் திட்டுவேனா? ஆதிக்கம் என்பது, ஒன்று ஆளவும், மற்றொன்று, அடங்கி நடக்கவுமாக நிலைமை இருப்பதற்கு, ஆதிக்கம் என்ற பெயர் பொருந்தும். ஏகாதிபத்யம், என்பது அதைவிடக்கேடானதல்லவா? மற்றவற்றை அழித்தொழித்து, ஒன்று தலைதூக்கி, ஈடு எதிர்ப்பு இன்றி இருக்கும் நிலைமை தானே, ஏகாதிபத்யம். ஹிந்திமொழியை, இதற்கான கருவியாக்குகிறார்கள். மற்ற மொழிகளெல்லாம்அழிக்கப்படவேண்டும், அல்லது எடுபிடியாக—கூலியாக — ஆக்கப்பட்டுவிடவேண்டும், என்பதுதான் அவர்கள் திட்டம். ஆகவேதான் ஏகாதிபத்யம் என்று தீட்டினேன்."

"உண்மை, தமிழ்மகனே! மாமண்டைகளுக்குக் கூடப்புரியக்கூடியவிதமாகவே தீட்டியிருக்கிறீர்."

"ஏகாதிபத்யம், என்ற சொல் போதுமல்லவா, அந்தத்திட்டத்தின் தீமையை விளக்க.!"

"ஆமாம், ஆமாம், நமது நாட்டு மக்கள் கடந்த அறுபது ஆண்டுகளாக எந்தச்சொல்லை, தீதானது, கேவலமானது, ஒழிக்கப்படவேண்டியது என்று கூறிவந்தனரோ,அந்த ஏகாதிபத்யம் என்றசொல்லையல்லவா உபயோகித்திருக்கிறீர்."

"நாற்றம் தாங்க முடியவில்லை, குடலைப் புரட்டுகிறது, பார்க்கவே அருவருப்பாக இருக்கிறது,எண்ணிணாலே அருவருப்புண்டாகிறது என்று ஒரு பொருளைப்பற்றிப் பலப்பல கூறுவதற்குப்பதிலாக, அந்தப் பொருளை, அது மலம்போன்றது. என்று இரத்னச் சுருக்கமாகக் கூறிவிடலாமல்லவா!"

"ஆமாம்—அதுபோலத்தான், இந்தி தீதானது, பயங்கரமானது, நமது வாழ்வைப் பாழாக்குவது, நம்மை அடிமையாக்குவது, என்றெல்லாம் விவரமாகக் கூறுவதற்குப் பதிலாக, ஏகாதிபத்யம் என்ற ஒரே சொல்லை உபயோகித்தீர். தமிழ் மகனே! உமது அறிவுத் திறமையைப் பாராட்டுகிறேன்"

"மேலும், ஏகாதிபத்யத்தை எதிர்த்து எதிர்த்து, நமது மக்கள் பழகிவிட்டார்கள். ஆங்கில ஏகாதிபத்யத்தை ஒழித்துவிட்டார்கள்—அவர்களிடம் இதோ ஒரு புதிய ஆபத்து வருகிறது—ஹிந்தி ஏகாதிபத்யம் வருகிறது என்று கூறினால் போதும், உடனே அவர்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு எதிர்த்து ஒழிக்கக் கிளம்புவார்கள். அதனால் தான், ஹிந்தி ஏகாதிபத்யம் என்ற தலைப்பு கொடுத்தேன்,"

"தமிழ் மகனே! நமது மக்கள், இந்தியால் ஏற்பட இருக்கும்—ஏற்பட்டுக் கொண்டுவரும் ஆபத்தைச் சரிவர உணர்ந்துகொள்வார்களா? உணர்ந்துகொண்டாலன்றோ, இந்தி ஏகாதிபத்யத்தை ஒழிக்கக் கிளம்புவர். எனக்குள்ள கவலை அதுதான், உணர்ந்துகொள்வார்களா?"

"உணர்ந்து கொள்வார்கள்—உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான், நான் பட்டவர்த்தனமாக எழுதியிருக்கிறேன். கவலைப்படாதீர். உணர்ந்துகொள்வார்கள் நிச்சயமாக. இதோ கேளும், "இடத்தைக்கொடுத்தால் மடத்தைப் பிடுங்கினான்" என்ற கதைபோல இருக்கிறது இந்த விஷயம்—என்று தீட்டியிருக்கிறேனே. பழமொழி நமது மக்களுக்கு நன்கு தெரிந்தது தானே. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குபவன், யார்? காதகன், கயவன், கன்னெஞ்சக்காரன் தானே செய்வான் அதுபோல. அந்தக் கருத்துத் தெரியும்படிதான், பழமொழியைப் பிரயோகித்திருக்கிறேன். பூடகமாகச் சொன்னால் போதாது என்று, பச்சையாகவே எழுதியிருக்கிறேன்.

"இந்தியாவில் ஹிந்தி ஏகாதிபத்தியத்தையே நிலைநாட்டிவிடப் பிரியப்படுகிறார்கள். மற்றபாஷைகளையும் மற்றபாஷைக்காரர்களையும்ஹிந்திபாஷைக்கு அடிமையாக்கி விடவே எண்ணுகிறார்கள்."

"தமிழ் மகனே! திட்டமாகத் தான் கூறியிருக்கிறாய்."

"அதுமட்டுமா? 'ஹிந்தி ஏகாதிபத்தியப் பிரயத்தனம் தற்சமயம் பல இடங்களில் பல உருவங்களில் தலைதூக்கித் திருவிளையாடல் புரிவதைப் பார்த்து வருகிறோம்'—என்றும் தீட்டியிருக்கிறேன்."

"ஆமாம்—பல உருவங்களிலே கிளம்புகிறது, இந்தி ஏகாதிபத்யம்—தபால் உத்தியோகத்திலே உள்ளவர்கள் அனைவருக்கும் இந்தி தெரிந்திருக்கவேண்டும், ஆகையால், தபாலாபீசுகளிலெல்லாம் இந்திபோதிக்க வகுப்புகள் ஏற்பாடு செய்யவேண்டும், என்று யாரோ, பம்பாய் அதிகாரி ஒருவர் பேசினதாகச் சின்னாட்களுக்கு முன்பு செய்தி வந்ததே! தமிழ் மகனே! நெஞ்சு பதைக்கிறதல்லவா, இப்படிப்பட்ட செய்திகளைப் படிக்கும்போது. வெள்ளைக்காரன் செய்த கொடுமையைவிட மோசமானதாக இருக்கிறதே இவர்கள் செய்வது"

"ஆமாம்! அதையும் தெளிவாகத் தீட்டியிருக்கிறேன்.

> ஏதோ ஆங்கிலேயர்களாவது இண்டியன் இங்கிலீஷ் என்று தங்களுக்குள் சிரித்துவிட்டு,ஏதோ காரியம் நடந்தால சரி என்று இருந்தார்கள், ஆனால், ஹிந்தி ஏகாதிபத்தியவாதிகளோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மற்றப்பாஷைக்காரர்களை மட்டந் தட்டவும் அதைக் காரணமாகக்கொண்டு கீழே அமுக்கிவைக்கவும் பார்க்கிறார்கள்—என்று எழுதியிருக்கிறேன், கவனித்தீரோ?"

"கவனித்தேன்—களிப்படைந்தேன், தமிழ் மகனே!"

> "இந்திய சர்க்கார் உத்யோகங்களிலும் ஹிந்தியின் ஏகாதிபத்யம் கொடுமையுடன் ஆட்சி செலுத்தத் தொடங்கியிருக்கிறது — என்றுகூடத் தீட்டினேன்."

"பார்த்தேன், தமிழ் மகனே! பார்த்தேன். இந்தி, இந்தியாவின் தேசிய பாஷையாக வேண்டுமென்று தானே முதலிலே அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்?"

"ஆமாம்! ஆனால், அவர்களின் உள்நோக்கம் வேறு. அதையும் நான் தெளிவுபடுத்திவிட்டேன்.

> 'ஹிந்தி பாஷை இந்தியாவின் தேசியபாஷையாவதோடு அவர்கள் திருப்தியடையத் தயாராயில்லை. இந்தியாவில் ஹிந்தி ஏகாதிபத்தியத்தையே நிலைநாட்டிவிடப் பிரியப்படுகிறார்கள். மற்றப் பாஷைகளையும் மற்ற பாஷைக்காரர்களையும் ஹிந்தி பாஷைக்கு அடிமையாக்கிவிடவே எண்ணுகிறார்கள்

என்று பட்டவர்த்தனமாக எழுதியிருக்கிறேன்"

"இங்கிலீஷ் இருந்த இடம் இந்திக்கு வேண்டுமாம், தமிழ் மகனே!"

"அப்படித்தான் சொல்லுகிறார்கள் இந்தி பாஷை வெறியர்கள். அவர்களின் ஆணவத்தை மண்டையிலடிக்கிறபடி எழுதியிருக்கிறேன். இந்தியின் யோக்யதை என்ன—இங்கிலீஷின் யோக்யதை என்ன!"

"தமிழ் மகனே! தைரியமாகத்தான் எழுதியிருக்கிறாய்.

"ஆங்கில மொழியிலுள்ள அறிவுக் களஞ்சியங்களுக்கு அளவு சொல்லமுடியாது. ஆங்கில மொழியில் உள்ள இலக்கியச்செல்வம் ஏழு சமுத்திரங்களையும் விடப் பெரியது."—

என்றல்லவா, எழுதியிருக்கிறீர்."

"ஆமாம் — உண்மையைக் கூறுவதிலே, பயம் ஏன் இருக்கவேண்டும்.

தமிழ் நாட்டைப்பற்றிய விவரங்களைச் சொல்லும் புத்தகங்கள் தமிழில் உள்ளவற்றைக் காட்டிலும் ஆங்கிலத்தில் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

என்று கூடத்தான் எழுதிக் கேட்டிருக்கிறேன்"

"ஆமாம், ஆஸ்திரேலியா தேசத்தையடுத்த கடல்களில் எத்தனை ஆயிரம் வகை மீன்கள் இருக்கின்றன என்பதைப்படங்களுடன் விவரமாகக் கூறும் பெரிய புத்தகங்கள் ஒன்பது இருக்கின்றன."—என்று கூட எழுதியிருக்கிறீர்"

"ஆமாம்—ஏன் சிரிக்கிறீர்—மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டு, மீன் ஆராய்ச்சிக்குச் சென்றுவிட்டேனே என்று எண்ணிச் சிரிக்கிறீரா?"

"இல்லே, இல்லே, தமிழ் மகனே! இங்கிலீஷை எவ்வளவோ கேவலமாமக் கண்டித்துப் பழக்கப்பட்டவராயிற்றே, இந்த 'கல்கி' ஆசிரியர் போன்றவர்கள், அவருடைய அலுவலகத்தில் இருந்துகொண்டே, இவ்வளவு துணிவுடன் இங்கிலீஷைப் புகழ்கிறீரே என்றுஎண்ணினேன்—சிரித்துவிட்டேன்"

"கொஞ்சம் காரசாரமாகக் கூட எழுதிவிட்டேன்—

ஆங்கிலத்தை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக ஹிந்தியை உபயோகிப்பது என்பது முழு மடமையேயாகும்.

என்று எழுதியிருக்கிறேன்."

"முழு மடைமை!—தமிழ் மகனே! தைரியமாகத்தான் தீட்டிவிட்டீர்."

அறிவைத் தேடுவதற்கோ இலக்கியச் சுவையை அனுபவிப்பதற்கோ, பண்பாட்டை வளர்ப்பதற்கோ ஹிந்திபாஷையினால் பயன் ஒன்றும் இல்லே.—

என்று எழுதியிருக்கிறேன்."

"உண்மைதானே அது! என்ன வளம் உண்டு, இந்தியில்? நேற்றுத் தோன்றியது. நமது தமிழ் தொன்மை வாய்ந்தது. நமதுதமிழை ஒழிக்க ஒரு முயற்சி நடக்கிறதென்றால், தமிழ் மகனே! இரத்தம் கொதிக்காதா?"

"இரத்தக் கொதிப்புடன்தான் தீட்டியிருக்கிறேன்—

ஹிந்தி பாஷைக்காரர்கள் அந்தப் பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க விரும்புகிறார்கள், என்று நாம் சொல்லுவது விளேயாட்டல்ல, வெறும் பயமுறுத்தலும் அல்ல. வடநாட்டு அரசியல் வாதிகள்—ஹிந்திபண்டிதர்களுக்கிடையே இத்தகைய ஏகாதிபத்ய வெறி வளர்ந்து வருகிறதென்பதற்குப் பல அறிகுறிகள காணப்பட்டுவருகின்றன. வடநாட்டுக்குச் சென்று வரும் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பலரும் வடநாட்டில் வாழ்க்கை நடத்தி வரும் தமிழர்கள் பலரும் ஏற்கனவே இதைப் பற்றிப் புகார் செய்து வந்திருக்கிறார்கள்"

என்றெல்லாம் எழுதியிருக்கிறேன்."

"படித்தேன், படித்தேன், தமிழ் மகனே! உமது கட்டுரையின் சாரத்தைச் சொல்லட்டுமா.

1. இந்திஏகாதிபத்யம், ஒரு ஆபத்து.

2. வடநாட்டு அரசியல் தலைவர்களும் பாஷைப் பண்டிதர்களும் இந்தி ஏகாதிபத்யத்தைப் புகுத்துகிறார்கள்.

3. இந்த வெறி வளர்ந்து கொண்டே வருகிறது.

4. வடநாடு சென்று வரும் தமிழர்கள் இதனை உணர்ந்து உரைத்திருக்கிறார்கள்.

5. மற்ற பாஷைகளையும் பாஷைக்காரர்களையும் மட்டந்தட்டி, அடிமையாக்கவே, இந்தி ஏகாதிபத்திய வெறியர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

6. இந்தி, வளமற்ற மொழி.

7. அறிவுத் துறைக்கோ இலக்கியத்துக்கோ, பண்பாட்டுக்கோ பயன்படாதது, இந்தி.

8. இங்கிலீஷ் பாஷைக்கு உள்ள இலட்சணம் இந்திக்குக் கிடையாது.

9. இந்திஏகாதிபத்திய வெறியை எதிர்த்து ஒழித்தாக வேண்டும்.

10. இந்திஏகாதிபத்யம் என்பது பாஷை அளவோடு உள்ளது அல்ல—அரசியல் துறையிலும் நுழைகிறது"

"என் கட்டுரையின் சாரம் அதுதான்"

"தமிழ் மகனே! இவ்வளவு விளக்கமாகவும் வீரமாகவும் கட்டுரை தீட்டியதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தி என்றால், ஏதோ நமது வசதிக்காக கற்றுக்கொள்ளவேண்டிய மொழி, அதனால், நமது மொழிக்கோ மக்களுக்கோ ஆபத்து வராது, இந்தியாவுக்கு ஒரு பொது மொழி, தேசிய மொழி இருப்பது அவசியம். அதற்காகத்தான் இந்தி—என்று நமது மக்களை நம்பும்படி செய்துவந்தனர். அங்ஙனம் செய்தவர்களில் சிலர் விவரம் அறியாதவர்கள், சிலர் நயவஞ்சகர்கள். உமது கட்டுரை இந்த இருசாராரையும் திருத்தும்—தமிழருக்கு விழிப்புண்டாக்கும். இவ்வளவு தீட்டிய உம்மைக் காண வேண்டும் என்று என் மனம் துடிக்கிறது—ஏன் முகத்தை மறைத்துக் கொண்டிருக்கிறீர் — தமிழ் மகனே! முகமூடியை எடுத்துவிடும், தமிழர் உம்மைக் காணட்டும்."

"வேண்டாம், வேண்டாம். அதற்கு இது சமயமல்ல;"

"தமிழகத்திலே, இந்தி மொழி கூடாது என்று பல ஆண்டுகளுக்கு முன்பே கூறி, கிளர்ச்சி செய்து, அடக்குமுறைக்கு ஆளான கூட்டத்தார் இருப்பது, தமிழ் மகனே! உமக்குத் தெரியுமே. அவர்கள் உமது கட்டுரையைக் கண்டால் களிநடமாடுவார்கள்—கை குலுக்க வருவார்கள்—"

"ஆமாம் — அதற்காகத் தான் நான், முகமூடி போட வேண்டி இருக்கிறது."

"ஏன்?"

"ஏனா! நான் இன்று தீட்டியுள்ளவைகள் யாவும் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தீட்டி வந்தவை. ஹிந்தி ஏகாதிபத்யம்—என்ற சொற்றொடரை உபயோகித்தவர்களே, அவர்கள்! வடநாட்டார், ஆதிக்க வெறியுடன் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள், என்று அவர்கள் எச்சரிக்கை செய்தனர் - இந்தியை எதிர்த்தனர்."

"ஆமாம்—இன்று அதே கருத்து, 'கல்கி'யில் இடம் பெறக் கண்டு களிப்பர்."

"இல்லை — கேலி பேசுவர் — படுகுழி இவ்வளவு காலத்துக்குப்பிறகு தானா தெரிகிறது, விழி பழுதா உனக்கு? என்று கேட்பர். இந்தி ஒழிக என்ற முதல் முழக்கத்தை நாங்கள் கிளப்பியபோதே, நீயும் ஒத்துழைத்திருந்தால்-அந்தக் கண்ணியம் வராவிட்டாலும் — எதிர்க்காமலாவது இருந்தால், இன்று இந்தி இப்படி வெறிபிடித்து அலையுமா? என்று இடித்துரைப்பர்."

"தமிழ் மகனே! அச்சம் வேண்டாம், அறிவு, உதிக்கக் காலதாமதமாயிற்று, எனினும் உதித்ததே, அதுபோதும் என்று எண்ணி அகமகிழ்வர்."

"இல்லை — எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது, அவர்கள் ஒரு சமயம் பெருங்குணத்தால என்னை மன்னித்தாலும், பொதுமக்கள் என்ன எண்ணுவர் என்னைப்பற்றி, இந்திமொழி மூலம் இவ்வளவு பெரிய ஆபத்து வந்திருக்கிறது என்று, இன்று 'கல்கி'யில் கட்டுரை வெளிவருகிறதே, இதே விஷயத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்பே, சொல்லடி, கல்லடி, தடியடிக்கு மத்தியிலே நின்றுகொண்டு கூறினரே திராவிட இயக்கத்தார், அப்போது 'கல்கி'யின் அறிவுக்கண் ஏன் குருடாகிக் கிடந்தது, ஆணவம் ஏன் மேலோங்கி இருந்தது—ஏன் தமிழர் பெரும்படையை 'கல்கி'க் கூட்டம் எதிர்த்தது, என்றெல்லாம் எண்ணுவர் — ஏதேதோ பேசுவர் ஏசுவர்—இதற்காகத்தான், நான் யார் என்பதை வெளியே தெரிய விடக்கூடாது என்று 'மூடி' போட்டுக் கொண்டிருக்கிறேன்—அது மட்டுமில்லை—இரண்டொரு வாக்கியம் அவர்களையே கண்டித்தும் இருக்கிறேன்.

> தமிழ் நாட்டில் ஒரு கூட்டத்தார் சில காலத்துக்கு முன்பு 'இந்தி ஒழிக' என்ற கூச்சலைக் கிளப்பினார்கள். இந்தக் குறுகிய துவேஷ மனப்பான்மை கொண்ட கூச்சலைத் தமிழ்ப் பெருமக்கள் எதிர்த்து ஒழித்துக் கட்டினார்கள்"—

என்று எழுதியிருக்கிறேன்."

"தமிழ்மகனே! அதையும் கண்டேன்-பதைத்தேன். இந்தி வெறியரின் போக்கையும் நோக்கத்தையும் இவ்வளவு தெளிவாகக் கண்டறிந்து இவ்வளவு பட்டவர்த்தனமாகக் கண்டிக்கும் தமிழ் மகன், யாரைப் போற்றவேண்டுமோ, அந்தக் 'கூட்டத்தாரை'க் கண்டித்து எழுதுகிறாரே, ஏன் என்று எண்ணினேன் — திகைத்தேன்-தெளிவு பெறவே இங்கு வந்தேன்-இதைக் கண்டேன்"

இவ்விதம்கூறிக்கொண்டே கம்பாசிடர் குமரப்பன், மேஜை மீது கொண்டுவந்து வைத்த, காகிதச் சுருளைக் கொடுத்தேன், தமிழ்மகன் கரத்தில். அதைப்பார்த்ததும் தமிழ் மகன், துடி-துடித்தான்.

"தமிழ்மகனே! இதைஇந்த வாரக் 'கல்கி'யில் வெளியிடப்போகிறாயா?" -என்று ஆர்வத்துடன் கேட்டேன்.

"இல்லை-இல்லை-இது எப்படி உமக்குக் கிடைத்தது" என்று தமிழ் மகன் கேட்டார். அந்தக் காகிதச் சுருளை எனக்குக் கிடைத்த விதத்தைக் கூறினேன். திடுக்கிட்டுப்போன 'தமிழ்மகன்' அந்தக்காகிதச் சுருளை மேஜை அறையிலே வைத்துப் பூட்டி விட்டார்.

"இந்த வாரம் வெளி வருகிறதா? என்று மீண்டும் கேட்டேன்.

"இல்லை-இது போனவாரம் நான் வெளியிட்ட இந்தி ஏகாதிபத்யம் என்ற கட்டுரையில் ஒருபகுதிதான்" -என்று சோகத்துடன் கூறினார் தமிழ் மகன்.

"பத்திரிகையில் இந்தப் பகுதி காணோமே" என்று நான் கேட்டேன்.

"கடைசி நேரத்தில், இந்தப் பகுதியை நீக்கி விட்டேன்" என்று மீண்டும் சோகத்துடன் பதில் கூறினார் தமிழ் மகன்.

"ஏன்?" — என்றேன், நான் —கோபம் பிறந்தது.

"எப்படி, என்னை நானே கேவலப்படுத்திக் கொள்ள முடியும்" என்றார், தமிழ்மகன்.

"கோழைத்தனம், என்று கூறும்" என்றேன் நான் கோபமிகுதியால்,

"இந்தி வெறியர்களைக் கண்டிக்க வேண்டும் என்று தோன்றிற்று எழுதிக்கொண்டே போனேன்—கட்டுரை வளர வளர, நானே பயந்து போனேன்—'இந்தி ஒழிக' என்று கூவிய கூட்டத்தார் தீட்டுவது போலவே இருந்தது என் கட்டுரை —என் நிலைமை, என் சகாக்கள்—எனக்கு உள்ள சூழ்நிலை, இவைகளை எண்ணினேன் —செச்சே! ஆபத்தில் சிக்கிக்கொண்டோம் என்று தோன்றிற்று — உடனே, கட்டுரையைத் திருத்தினேன் — 'இந்தி ஒழிக'— என்று பேசியவர்களைக் கொஞ்சம் கண்டித்து எழுதினேன். வேறு வழியில்லை" என்றான் தமிழ் மகன்.

"சுயநலம்!' — என்றேன் நான் சூடாக.

"சூழ்நிலை" என்றார் தமிழ் மகன்.

"சூழ்நிலையை வெல்பவனே வீரன் —தமிழன்" என்று நான் கூவினேன்.

"என்றால் அது முடியவில்லையே" என்றார், அழுகுரலில் தமிழ் மகன்.

"அப்படியானால், நீ, உண்மைத் தமிழ் மகனல்ல"-என்று நான் உரக்கக் கூவினேன். என் எதிரே உட்கார்ந்துகொண்டிருந்த 'தமிழ்மகன்' பயத்தால் நடுங்கினான்—நான் கோபத்தால் துடித்தேன். என் குரல் மேலும் மேலும் கோபத்தைக் கொட்டலாயிற்று.

உண்மைத் தமிழ் மகன் அல்ல!
உண்மைத் தமிழ் மகன் அல்ல!!
உண்மைத் தமிழ் மகன் அல்ல!!!

—பெருங்கூச்சலிட்டேன்.

X X X

"என்னடா, தூக்கத்திலே, இந்த அமர்க்களம் — என்று கேட்டபடி, என்னைத்தட்டி எழுப்பினான், என் நண்பன் வீரன். கண்களைக் கசக்கிக் கொண்டே எழுந்தேன், படுக்கையில் என்பக்கத்தில் மே 7-ந்தேதிய 'கல்கி' இருந்தது.

புத்தர் போதனை—ஓர் போர் முரசு

[K. A. மதியழகன்]

நள்ளிரவு............

கபிலவாஸ்து முழுதும் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தது. எங்கும் நிசப்தம். திடீரென அவனுக்கு ஓர் உறுதி பிறந்தது. மலர்ப் படுக்கையிலே யசோதரை தூங்கிக்கொண்டிருந்தாள். அவளது அணைப்பிலே சின்னஞ்சிறிய குழந்தை ராகுலன் கண்ணயர்ந்து கொண்டிருந்தான். அருகே மங்கிய குத்துவிளக்கு. அதன் சிவந்த ஒளியிலே அவர்களின் முகத்தைப் பார்த்தான். ஒரு நிமிடம் மனத்திலே சலனம். அரசபோகம், ஐஸ்வரியம், யசோதரையின் ஆசை முத்தங்கள், அன்பு அணைப்புகள், குழந்தையின் கொஞ்சும் மழலை மொழிகள், அத்தனையும் அவனது உறுதியை நிலைகுலையச் செய்தன. ஆனாலும், உரம்பெற்ற அவனது உள்ளம் தியாக வாழ்வை விரும்பியது.

சந்தடியின்றி வெளியேறிவிட்டான். ஆண்மனையைக் கடந்து, அழகிய நகரத்தைக்கடந்து, வாய்க்கால், வயல் வெளிகளையெல்லாம் கடந்து சென்று கொண்டிருந்தது ஒரு குதிரை. குதிரையின் குளம்படிச் சப்தம்தான், நிசப்தமான அந்த நள்ளிரவின் மௌனத்தைக் கிழித்துக்கொண்டிருந்தது. மங்கிய நிலவொளியிலே, பரந்த வானக்கூரையிலே ஜொலித்த வைரக்குப்பையின் கீழே போய்க்கொண்டிருந்தான், புதுமை காணப் புறப்பட்ட அந்த வீரன். நாட்டின் எல்லையையும் தாண்டிவிட்டான். சலசலவென ஓடும் சிற்றாறருகே, பரந்த மணல் வெளியிலே கீழே இறங்கினான். தனது அழகிய மயிரை, வாளால் வெட்டினான். பட்டாடையைக் களைந்தான். அருணோதயம் தென்பட்டது. பரந்த உலகிலே ஆண்டியாகி, உண்மையைத் தேடிப்பயணம் துவங்கினான்.

கால்நடையாகவே தெற்கே நடந்தான். விந்திய பர்வதத்தை அடைந்தான். அங்கே தபசிகள், பலர் வாழ்ந்தனர். அவர்களிலே இவனும் ஒருவனானான். தாங்கரும் தவமேற்கொண்டான். பட்டினி இருந்தான். விரதம் மேற்கொண்டான். உடலை வாட்டிக்கொண்டான். அத்தனையையும் அனுஷ்டித்தான். அந்த வேத வேதாந்திகளையே, தவசிரேஷ்டர்களையே தனது சந்தேகங்களுக்கு பதில்கேட்டான். மதவிசாரணை நடத்தினான். சகலத்திற்கும் வேதம் விதித்தது, உபநிஷத்திலே உள்ளது என்ற பாணியில் கூறினரே தவிர, விஷய விளக்கமாய் இல்லை.

"சகலரும் மக்கள்தானே! சண்டாளர் என்றோர் கூட்டம் ஏன்? நால் வருணம் நாட்டிற்குத் தேவைதானோ?" என்றான்.

"நாதன் கட்டளை அது! வேதமும் கீதையும் அப்படித்தான் சொல்லுகின்றன" என்ற அதே பதில்தான் கிடைத்தது.

"மிருகங்களும் உயிர்தானே! யாகத்தின்பேரால் ஊமைப் பிராணிகளைச் சித்திரவதை செய்வது உன்மத்தச் செயலல்லவா? அன்பிற்கு வெட்டும் படுகுழியல்லவா?"

"அப்படியல்லவே! ஆண்டவனின் திருப்திக்காகவே அத்தனையும்" என்றனர்.

"அறிவு அனைவருக்கும் பொதுதானே! கீழ் ஜாதியினர் படிக்கக் கூடாது என்கின்றீரே, அநீதியல்லவா இது" என்றான்.

"சாஸ்திரம் சம்மதிக்கவில்லையே" என்றனர்.

பிராமணியத்தின் பித்தலாட்டம் புரிய ஆரம்பித்தது. நெடு நாட்கள் தவம் இருந்த பின், விரதமும் பயனில்லை, வெறுப்பும் பயனில்லை, பட்டினி போடுவதும் உடலை வாட்டுவதும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தான். வேண்டாத ஜாதி நெருப்பை மூட்டிய வீணர்களின் செயல், உயிர்களை வாட்டும் கொலை யாகங்கள், பொய்யும் புனைசுருட்டும் நிறைந்து உண்மையையும் வாய்மையையும் பலியிடும் கற்பனைக்கதைகள், நயவஞ்சகர்களின் ஒழுக்கமற்ற நரிக்குணம், இவையாவும கண்ணிலும் கருத்திலும் பட ஆரம்பித்தது.

துணிந்து ஓர்நாள், "பட்டினி விரதத்தில் பயனில்லை. தெம்புள்ள தேகத்தில்தான் திறமையுள்ள மூளை இருக்கும்; தெளிவுள்ள அறிவு பிறக்கும், என தனது சீடர்கள் முறையிலே இருந்த துணைவர்களிடம் கூறினான். பட்டினி விரதத்தை விடுத்து நல்ல உணவுகொள்ள ஆரம்பித்தான். அவர்கள் கோபித்து இவனை விட்டகன்றனர்.

பிறகு இவைகளை உதறிவிட்டு, கங்கை நதி தீரத்திலே உலவினான். அவனது சிந்தனை வேலை செய்து கொண்டே இருந்தது. இறுதியில் அறிவுத் தெளிவு—அறிவு ஒளி கிடைத்தது. இதைத்தான் 'ஞானோதயம்' என்று மெருகிட்டனர்.

தனது இலட்சியத்திற்கு அவனால் உருவந்தர முடிந்தது.

மனிதரிலே பேதமில்லை. சகலரும் சமஉரிமை பெற்றவர். தன்னலம் அகற்றப்படவேண்டும்; பிறர் நலம் பேணும் உள்ளம் வேண்டும். மாநிலத்தில் மற்றவர் துயரத்தைக் களையும் தொண்டுள்ளம் மலரவேண்டும். எண்ணம், சொல், செயல் இவைகளிலே தூய்மை தவழ வேண்டும். அனைத்துயிரிடத்தும் அன்பு மலர வேண்டும். உண்மைகாக்கப்படவேண்டும் ஒழுக்க வாழ்வு ஓங்கவேண்டும். சுயநல ஆசைகள், தான்வாழ வேண்டும் என்ற தருக்கு, தகர்க்கப்பட வேண்டும். ஆத்மா என்ற ஒன்றில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை

மனப் போர்

தில்லை வில்லாளன்

மறுநாள் மதுரை எங்கெங்கோ வேலைக்கு அலைந்தான். யாரும் வேலையில் வைத்துக்கொள்வதாக இல்லை. இப்படிப்பலநாட்கள்....இரயிலடியில் மூட்டைகளைத் தூக்கிக் கூலி பெற்றான். மண் சுமந்தான், கொத்தர்களுடன்; விறகுஒடித்தான், விறகுவெட்டிகளுடன்! என்னென்ன வேலைகள் கிடைத்தனவோ அவைகளெல்லாம் செய்தான்......தங்கம்மாவின் முகத்திலே வாட்டம் தெரியக்கூடாதுஎன்ற குறிக்கோளோடு! அவன் நினைக்கிறபடி எல்லாம் செய்யமுடிகிறதா? அவள் போட்டிருந்த தோட்டையும், கட்டைக்காப்பையும் விற்கவும் நிலைமை அவனைத் தள்ளிக்கொண்டு போய்விட்டது! வறுமை ஒரு ஈசல் புற்று...அதிலிருந்து துன்பஈசல்கள் வந்துகொண்டே இருக்கும்! இல்லாமை என்பது ஒரு தொழுநோய், நாளாக ஆக அதன் கொடுமை வளரும்!

திருட்டுக் கூடாது என்று கூறுகிற சமூகம்.........அது பாவம்! களவு கொடிது...என்றெல்லாம் புலம்பும் சமூகம், இதற்குப் பதில் சொல்லட்டும்! மதுரையை ஏன் வாடவிட வேண்டும்? அவன் உடலில் வலுவில்லையா? உழைக்க முடியாது என்று சொன்னதுண்டா? மேனி வாடாமல் கூலி வேண்டும் என்று கேட்டதுண்டா?......இல்லையே...... அவன் தன் உழைப்பை வலுவில் கூவிக்கூவி ஏலம் விட்டும் எடுப்பாரில்லாமல் அதை வேறு வகையில் திருப்பவேண்டிய அவசியத்தில்வந்து விட்டதால்தான் திருடவும் துணிந்தான். அவனுக்குத் தெரியும் திருடுவது சமூகத்தின் பாவப் பட்டியலிலே ஒன்று என்று......! எனினும் திருடுகிறான், 'போலிஸாரின்' நினைவிருந்தும், நீதி மன்றமிருப்பது அறிந்தும், சிறைக்கூடம் உண்டு என்பதையுணர்ந்தும்! உலகத்தில் வியாபாரி, வக்கீல், நடிகன், பாடகன் .....என்று ஏதேதோ பேர் சொல்லிக்கொண்டுதிருடுகிறார்கள், அதற்கு அந்தப் பெயரில்லை. ஆனால் செயல் மட்டும் மதுரை தீர்மானித்தது தான்! ஆம், அவன் பிச்சையேற்க விரும்பவில்லை. திருடவே முடிவு செய்தான்!

ஒரு நாள் மாதா கோவில் வழியாக ஒரு குழந்தை வந்துகொண்டிருந்தது. மதுரையும் அவன் மனைவியும் மூன்று நாட்கள் தொடர்ந்து 'ஏகாதசி விரதம்'...'துவாதசி' இன்னும் எத்தனை நாட்களுக்குப் பிறகோ..........யார்கண்டார்கள்? மதுரை தன்தாடியும், வாட்டைத் தலையும் பயங்கரத் தோற்றத்தை அள்ளி வீச அந்த வழியாக வந்து கொண்டிருந்தான். அப்போது அந்தக் குழந்தையைப் பார்த்தான். அதன் கழுத்தில் அழகான இரண்டு பட்டைத்தங்கச்செயின் மின்னியது. திருடு, திருடு.........என்று விரட்டியது, அவன் சங்கடப்பட்ட மனம்! அவன்கையிலே இரண்டணாத் காணிருந்தது! திரும்பினான், நான்கு 'சாகிலட்' மிட்டாய்களுடன்; அந்தக் குழந்தை சென்ற திக்கிலேயே ஓடினான். அவன் நினைத்தபடியே குழந்தை ஏமாந்தது அழுமட்டுமா? அது அவன் வாழ்க்கையைக் கெடுத்தவனின் மகள்! ஆகவே அவன்மனம் இரும்பாகிவிட்டது. பாதாகோவிலின் பின் புறத்தில் அழைத்துச் சென்றான்.........அங்கேயுமா 'துரதிர்ஷ்டம்'......வறுமைத் தூதுவர்கள்....கெட்டகால 'எமன்கள்'...... துரத்திவரவேண்டும்! அங்கே வேலை செய்து கொண்டிருந்த தோட்டக்காரர்கள் பிடித்துக்கொண்டார்கள். சிறிது நேரத்தில் கூட்டம் கூடி விட்டது! ஆம், திருட நினைத்தபோதே திருடனாகப் பிடிபட்டான்.

குழந்தையை அவருடைய தந்தை யாரோ தேடிக்கொண்டு வந்து விட்டார். குழந்தையைக் கண்டதும் அவர் ஓடோடிவந்து அணைத்துக் கொண்டார்.

"லில்லி......உன்னை அந்தப்பாவி ஒன்றும் செய்யவில்லையே."

"சாக்லெட் கொடுத்தானே...... அப்பாகிட்டே அழைச்சுப் போறேன்னு. முன்னாலே நம் வீட்டிலே இருந்தானே......அவன்தான் ......"

குழந்தை லில்லி சொன்னதைக் கேட்டுத் திகைத்துப் போனார் டேவிட்.

அவர் கள்ளனைப் பார்த்தார், மிரள, மிரள விழித்தார். ஆத்திரத் தீ கொழுந்து விட்டெரிந்தது அவன் கண்களில்!

"ஆ......மதுரை"

அதற்குமேல் எதையும் பேசவில்லை.

மதுரையை டேவிட்டின் வீட்டுக் கூடத்தில் கட்டி விட்டார்கள். கூட்டமும் கலைந்து விட்டது! டேவிட் மட்டும் எதிரில் உட்கார்ந்திருந்தார்! கொஞ்சநேரத்தில் 'போலீசார்' வந்தனர், அவன் அவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டான்!

மாலையில் இந்தச் செய்திதங்கம்மாவுக்கு எட்டியது. அவள் ஓடோடியும் வந்து அவர் கால்களில் விழுந்து அழுதாள்! அழுது பயன்.........? காமம் என்ற கருநாகத்தின் நஞ்சு ஏறியிருக்கும் அந்த மனிதருக்கு இரக்கம் வருமா? அவர் ஒரு நிபந்தனையின் பேரில் அவளது கணவனை விட்டுவிட ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்...நிபந்தனை சொல்லித் தெரியவேண்டிய அவசியத்திலில்லை! பழைய கோரிக்கை...மன்மத ஒட்டலில் படுக்கை விரிப்பு, அதில் தங்கம்மாவின் இணைப்பு சுகம்!...அவள் சிந்தித்தாள் சீறினாள். ஆனால் அவன் அவளைப் பலிகொண்டு விட்டான்.

கொலையும் செய்தான்.

வழக்கறிஞர்களின் நாக்குச் சுழலுந் தன்மையுள்ளதாமே....திருப்பி விட்டு அவனை வெளியில் வரச்

செய்துவிட்டார். மதுரை, மதுரை நகரின் தெருக்களிலே திரிகிறான், தன் மனைவி தங்கம்மாவை நாடி! அதே நேரத்தில் தங்கம்மா, பசியெடுத்த புலியின் வாயிலே இருக்கும் மானாக மாறியிருக்கிறாள்...இது அவனுக்கு எப்படித் தெரியும்! மூன்று நாட்கள் அவளை வெளியிலே அனுப்பவே இல்லை. பிறகு வெளியில விட்டார். ஆச்சர்யம்—அங்கு போகும் பொழுது ஒருவளாகப்போனாள். திரும்பும்பொழுது இருவராகத் திரும்பியிருக்கிறாள் என்ற உண்மை இரண்டு தினங்களுக்குப் பின்னால்தான் அவளுக்குத் தெரிந்தது!

மதுரை இரண்டு நாட்கள் தேடித் திண்டாடி ஒருவாறு உண்மையை உணர்ந்து விட்டான்...அவ்வளவுதான்! அந்தக்காமுகன்டேவிட்டைத் தொலைத்துவிடுவது என்ற முடிவுடன் தன் கத்தியைத் தீட்டினான். திருடன் கொலைகாரனாகிறான். பாவி, மகாபாவியாகிறான்! ஏன்......பதில் தெரிந்து கொள்ளக் சுற்றுக்கொள்ளுங்கள். அன்று இரவு அவர் வீட்டில் நுழைந்து படுக்கையறையிலேயே குத்திக் கொன்று விடுவது என்று முடிவு செய்து விட்டான்! இரவும் வந்தது. அவன்தான் அந்த வீட்டில் வேலை செய்தவனாயிற்றே! ஒவ்வொரு இடமும் அவனுக்கு நன்றாகத் தெரியுமே! கள்ளத்தனமாக நுழைந்து, படுக்கை அறையில் புகுந்தான்...ஆ...ஓங்கிய கரம்......குத்திவிட்டான், குத்திவிட்டான் இரத்தவெள்ளம்.....ஆவிதுடிப்பு...உயிர்போகும் பிணத்தின உதைப்பு...! அவன் ஓடி விட்டான் இரத்தச் சிரிப்பைச் சிந்தும் கத்தியுடன்!

“போலீசாரிடம்”தானே போய்த் தனது கொலையைச் சொல்லிக் கொண்டான்...... ஆனால் அவன் நினைத்தது நடக்கவில்லை! கொலையுண்ட டேவிட் அவன் எதிரில் நிற்கிறார்......பின் கொலை செய்யப்பட்டது யார்? அவரின் மனைவி எலிசா அம்மை! ஐயோ...ஒரு புனிதவதியை......அன்புள்ளங் கொண்ட ஆதிரையை...கருணைவடிவான கண்ணகியைக்கொன்றுவிட்டான்! மதுரை பாவிதான்...பாவிதான்......! ஆனால் பாதகன் தப்பிவிட்டானே........ டேவிட் தப்பிவிட்டதால் புண்ணியசாலியா? அந்த மனிதன் எப்படித் தப்பினான்? மனிதன் செய்யும் குற்றத்திற்கு மனிதனே தண்டனை தர முடியாது! அப்படியானால் சிறைக்கூடங்கள் ஏன்? நீதிபதிகள் ஏன்? வழக்கறிஞர்கள் ஏன்? சாட்சிக் கூண்டுகள் ஏன்? காமுகன் தப்பிவிட்டான்......வறுமைச் சூறாவளியால் அடிபட்ட ஒரு மாசிலாமணி கொலைகாரனாகிவிட்டான்! பாவம், புண்ணியம் பேசுவோரே ஏன் இந்த நிலை? எப்படி ஏற்பட்டது இந்தக் கொலை? விதியா......சதியா? தானே நடந்ததா? ஆண்டவனுக்கும் இதற்கும் சம்மந்தமே இல்லையா?

தங்கம்மா ஓடிவந்தாள். கூண்டிலே நிற்கும் தன் கணவனைக் கண்டு அழுதாள், புலம்பினாள். ஆனால், மதுரை கலங்கவில்லை, கொலை செய்தேன் உண்மை......ஆனால், கொல்லப்பட வேண்டியவன் இன்னும் உயிருடன் இருக்கிறானே என்பது என் கவலை... எனக்கு எந்தத் தண்டனை தந்தாலும் நான் ஏற்கத்தயார். எனக்கு நீதியில் நம்பிக்கையில்லை. நீதி சாகாமலிருந்தால் இதோ எதிரில் நிற்கும் இந்த டேவிட் என் இடத்திலிருக்கவேண்டும். குற்றவாளி, என்னைக் கேள்வி கேட்கிறான்......இது நீதியா?...... இப்படிப்பேசினான். ஒழுங்கு, ஒழுங்கு என்றுகூறி அவன்பேச்சை நிறுத்தினர். அவன் தூக்கிலிடப்பட்டான், முடிவில்!

விபசாரி

காலிலே ஒரு இடத்தில் இடித்துக்கொண்டால மீண்டும், மீண்டும் அதே இடத்திலே அடிபடும்...... இது இயற்கை! அதுபோலவே தங்கம்மா ஒரு பெண் குழந்தையைப் பெற்ற பிறகும் வறுதிருக்க வழி கிடைக்கவில்லை. அவள் குடியிருந்த வீட்டின் பக்கத்து இல்லத்தில் ஒரு பெண்மணி தனியாக இருந்தாள். அவள் பெயர் வடிவாம்பாள். அவளது கணவன் சிங்கப்பூரில் லுங்கி வியாபாரியாம்! மாதா மாதம் பணம் அனுப்புவான். அந்த அம்மாவுக்கு தங்கம்மாவின்மீது மிகவும் பிரியம்......தங்கச்சி என்று அன்பாக அழைப்பாள். தங்கம்மா பெற்றெடுத்தபெண்குழந்தைக்குச் சகுந்தலை என்று பெயரிட்டதும் அவளேதான்! அந்த ஏழைக் குடும்பத்தை அவளே காப்பாற்றியும் வந்தாள்.

ஓராண்டு கழித்து வடிவாம்பாளின் கணவன் வடிவேலு திரும்பி வந்தான். வந்து சிலநாட்களிலேயே தங்கம்மாவின்மீது மோகப் பார்வையைச்செலுத்த ஆரம்பித்து விட்டான். தங்கம்மா முதலில்பயந்தாள். பிறகு துரோகம் என்று எண்ணினாள். ஆனால் வடிவேலு விடுவதாக இல்லை. சமயம் நேரும்பொழுதெல்லாம் குறும்புகளை நிறுத்தவேஇல்லை. அவளும் பெண்தானே.......பெண் மனம் ஒரு மணற் குவியல். அள்ளுவது ஒரு கை மண்ணானாலும், சரிவது அதிகம்! அரைக்கண நேரச்சந்திப்பில் ஆறுமாத உறவைப்பெருக்கிவிடமுடியும்! இந்தச் சூட்சமத்தை நன்றாக அறிந்தவன்போலும் அவன்! ஆகவே வடிவாம்பாள் பார்க்காத நேரத்தில் தங்கம்மா கிடைத்துவிட்டால், அவளைப்பம்பரம்போலச்சுற்ற விட்டான். அவள் முதலில் முழுமூச்சாக எதிர்த்தாள். பிறகு அறிவுரை சொன்னாள். அன்பாக அதட்டினாள். கடைசியில் அவள்தான் சரணாகதியடைய நேரிட்டது! ஆம், தங்கம்மா அவனுக்குத்திருட்டுமனைவியானாள்—ஆக்கப்பட்டாள்!

வடிவாம்பாளைப் பார்க்கும்பொழுதெல்லாம் தங்கம்மாவுக்கு அழுகைதான் வரும்! அவள் வெள்ளையுள்ளங்கொண்ட பெண்தெய்வம்...... வடிவேலுவின் சூதையும், தங்கம்மாவின் துரோக நடத்தையையும் சிறிதும் தெரிந்துகொள்ள வில்லை. சந்தேகங்கூடப்படவில்லை. அவளே தங்கம்மாவைவிட்டு, வடிவேலுக்குப் பணிவிடைகள் செய்யச் சொல்வாள்......எனக்கு உடம்பு என்னமோ போல இருக்கு......மாமாவுக்கு இன்று நீயே சோறு போடு...என்று அவளாகவேஅனுப்புவாள். இப்படித் தங்கம்மாவால், மனச்சாட்சியை சித்திரவதை செய்துகொண்டு வாழவே முடியவில்லை!

இந்த உலகத்தில் அவள் ஏன் வாழ்கிறாள்?......ஏதாவது குறிக்கோள் உண்டா?......அவள் நினைத்துப் பார்த்தாள். அவள் தன் மகள் சகுந்தலாவிற்காகத்தான்வாழவேண்டும்......அதற்கு எவ்வளவு பாரமூட்டைகளைக் கட்டிச் சேர்ப்பது? விபசார வாழ்வில் காலம் கழிப்பது? தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான்! ஆம், வேறு வழியில்லை.

இந்தத் திருட்டு வாழ்க்கையில் அவளுக்குத் துளியும் விருப்பமில்லை. இந்த எண்ணத்தை வடிவேலுவின் செய்கைகள் துரிதப்படுத்தின! ஏன்? அவன் எப்பொழுதும் வடிவாம்பாளைத் துன்புறுத்தத் தொடங்கிவிட்டான். அந்த அன்புச் சிலையை அவனது சூதுக்காரப் புத்தி எப்பொழுதும் துன்புறுத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தது! அவளை அவசியமில்லாமல் அடிப்பதும், திட்டுவதும் ......பல கொடுமைகள் புரியத்தலைப்பட்டான். அவளால் இந்த அநியாயத்தைச் சகிக்க முடியவில்லை. தங்கம்மா அவனைக் கண்டித்தாள். ஆனால் அவள் இருப்பது இடையூறு, ஒழித்துக்கட்டி விடுகிறேன் என்று துணிந்து கூறினான். ஐயோ... இன்னமும் உயிருடன் இருக்கலாமா? தனக்கு ஆதரவு காட்டியபெண்ணைத் தனக்காகஒழிக்கப்போகிறானாம்...... என்ன கொடுமை!

அப்பொழுதுதான் அந்த ஊரை விட்டே ஓடிவிடுவது என்று திட்டமிட்டாள். அப்படியே ஒரு நாள் இரவு மறைந்துவிட்டாள்! எங்கெங்கோ அலைந்தாள், அலைந்து கொண்டிருந்தபொழுதெல்லாம் தன் மகள் சகுந்தலையைப் பற்றியும், தனது உடன் பிறவாத தமக்கை வடிவாம்பாளைப் பற்றியுமே நினைத்து நினைத்து அழுவாள்......அதற்குப் பிறகுதான் பாக்கியத்திடம் அவள் வந்துசேர்ந்தது! இந்தத்துயரக்கதையைத்தான் அவள் யாரிடமும் சொல்வதில்லை என்ற முடிவிலிருந்தாள்.

இரண்டு பாவிகள்

அந்தப் பாவிகள் இப்பொழுது கூடித் திட்டமிடுகிறார்கள்......வடிவாம்பாள் இவனை விட்டு விலகி விட்டாள் போதும் மேலும் வழக்கும் போட்டுவிட்டாள். அவனுக்குப் பணங்கொடுக்கப்பயந்து 'வக்கீலுக்கு'. மட்டும் பணங்கொடுக்க வந்து விட்டான், புத்திசாலி!

இவனும் பாவி, அவனும் பாவி.... பாவிக்குப்பாவிபக்கத்துணை! பாவம், பாவத்தை நட்புக் கொள்கிறது...... டேவிட் பணமிருப்பதாலேயே புண்ணியசாலியாகிவிடமுடியுமா? வடிவேலு சொத்துக்காரன் என்பதாலேயே அவன்பாவங்களுக்கெல்லாம்பாவமன்னிப்புக்கிடைத்துவிட்டதா? மதுரை பாவியானதினால் வருந்தினான், தூக்கில் மாட்டப்பட்டான் என்றால், இந்தப் பாவிகள் ஏன் வருந்தவில்லை? இதற்கு யார் நீதி வழங்குவது? மனிதன் அன்று கொல்வான் தெய்வம் நின்றுகொல்லும்......என்பார்களே! இத்தனை ஆண்டுகள் கழித்தும் பாவத்திற்கேற்ற தண்டனை பெற்றதாகத் தெரியவில்லையே! ஐயோ... பாவம் என்ற பாம்பு, பணம் என்ற மகுடி சத்தத்தில் அடங்கியொடுங்கி விடுமா? அடங்கினாலும் அந்த நஞ்சு மடியாதே......அதன் வேகத்தின் முடிவு என்ன......! எப்படித் தெரிந்துகொள்வது?

கடைசியில் இந்த இரண்டு பாவிகளின் கூட்டுப்பண்ணையில் வந்தா அவள் சிக்கிக்கொண்டாள்? இனி அங்கு இருக்கலாமா? ஓடவேண்டியதுதான்! இனி இந்தப் பாவிகளின் நிழல் படும் இடத்திலே கூட நிற்கக் கூடாது! பாக்கியத்திடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகலாமா? எங்கே போவதாகச் சொல்வது...... எப்பொழுது திரும்புவது என்று கூறுவது? முடியாது. எந்தக் காரணம் சொன்னாலும் அவள் விடமாட்டாள்! ஆகவே இப்பொழுதே ஓடிவிடவேண்டும். ஆம், வெளியேறிவிடுவது கடினமல்ல......பிறகு என்ன செய்வது? தற்கொலைதானா? சாக வேண்டியதுதானா? சாவின் அணைப்பிலேதான் சாந்தியா? அவள் செய்த பாவங்களுக்கு இயற்கை விதிக்கும் ஒரே தண்டனை, தற்கொலைதானா? தங்கம்மா பாவியா? அதற்குத் தண்டனை இதுதானா? வேறு வழியே இல்லையா!

சாவதற்கு முன் கடைசியாக ஒரு முறை வடிவாம்பாளைப் பாக்த்தால் என்ன......அவளிடம் தனது சோகத்தைச் சொல்லி அழுதால் என்ன......அவள் ஓடிப்போனதைப் பற்றி அவள் என்ன நினைக்கிறாள்... சகுந்தலை இப்பொழுது எங்கு இருக்கிறாள்......மணமாகியிருக்குமா... அல்லது அவளைப் போலவே ஆகிவிட்டாளோ!......இதையெல்லாம் எப்படி அறிந்துகொள்வது? அந்த வீட்டிலேதான் இருக்கிறார்களா, அது அவரின் சொந்த வீடுதானே ......போய்ப் பார்க்கலாமா...இப்படி அவளின் மனம் கேட்டுக் கொண்டே இருந்தது.

அவன் சொன்னானே இரண்டு ஆண்டுகளுக்கு முன் வரை அவள் வளர்த்த பெண் சகுந்தலையென்று ......அப்படியானால் இப்பொழுது சகுந்தலை எங்கே......ஓடி விட்டாளா? தாயைப் போலப் பெண் என்று காட்டி விட்டாளா?...இதை எப்படியும் அவள் தெரிந்துகொள்ள வேண்டும்!

தங்கம்மா சுற்றும் முற்றும் பார்த்தாள். மேரியம்மா சமையற் கட்டில் இருந்தாள். வாசலை அடைத்துக் கொண்டு அந்தப்பாவிகள் உட்கார்ந்திருந்தார்கள்! ஆகவே மெதுவாகத் தோட்டத்துபக்கம் சென்றாள். அதன் வழியாக அடுத்த வீதிக்குப் போக வழியிருந்தது. ஆகவே அப்படியே வெளியேறிவிட்டாள்!

ஓடிவிட்டாள்

இருட்டிலே நடந்துகொண்டிருந்தாள். இரவு வர வர வளர்ந்து கொண்டிருந்தது. எங்கே போகிறது என்ற குறியே இல்லாமல் கிடைத்த பாதைகளிலெல்லாம் போய்க்கொண்டிருந்தாள். ஆரம்பத்தில் கூட்டம் கூட்டமாக மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். பிறகு குறைய ஆரம்பித்தது. மக்கள்நடமாட்டமேகுறைய ஆரம்பித்துவிட்டது! அவள் மனப் போர் மட்டும் முடிந்தபாடில்லை. எப்படியும் வடிவாம்பாளைப் பார்த்து அவள் கால்களில் விழுந்து அழுது அவளது கண்ணீரால் அவளுடைய கால்களைக் கழுவிவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டே நடந்தாள்.

(தொடரும்)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.